திராவிடநாடு

8-11-59 | வார வெளியீடு | விலை 16 காசு

பண்டைப் பெருமை!

—[வெண்ணெய் வேலன்]—

சீனத்தார் மிசிரத்தார் சிங்கை நாட்டார்
சீர்மைமிகு யவனத்தார் கிரேக்க நாட்டார்
பானத்தில் தமிழ்நாட்டு முத்தையிட்டுப்
பருகியதோர் பெண்வந்த ரோம் நாட்டாரும்
ஈனத் தொழிலென்று இழித்துக்கூரு
இணையற்ற வாணிகத்தின் துறையை நாடி
தேனொத்த தமிழ்நாட் டோடுறவு கொண்டார்
திகைப்பில்லை இதுவுண்மை தெரிந்து கொள்வீர்!

அரிசியுடன் திப்பிலியும் இஞ்சி மஞ்சள்
அகில் தேக்கு சந்தனமும் மிளகுந் தோலும்
பருத்தியினல் தமிழ்ப்பெண்டிர் நெய்த மென்மைப்
பாலாடைப் பவளமுடன் கராம்பு ஏலம்
துரிதநடையிட்டோடும் பரியும், மேரு
தொடர்மலையில் உண்டான மணியும் பொன்னும்
உரித்தான பொருள்வணிகத் துறையினுக்கே
உலகறியும் இவையாவும் உண்மை இஃதே!

காவிரிப்பூம்பட்டி னத்துத் துறையின் பக்கம்
கப்பல்வழி செல்கின்ற பொருளினுக்கு
தாவி நடைபோடும் வரிப் புலியின் சின்னம்
தந்திடுவார் முத்திரையாய் சுங்கம் தீர்ந்தால்
ஓவியமாய் ஆக்கியிதை மனக்கண் முன்னே
ஒழுங்குபட நிறுத்திவிடின் உள்ளமென்னும்
பூவிரிய புகழ்மணக்கும் தமிழ் நாட்டின்
புகழெல்லாம் இன்றெங்கே போனதந்தோ?

இந்திய—சீன எல்லைத் தகராறு பற்றி.....

இவர்கள் பேசினல்....!

எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ.

பண்டித நேரு

"உலக அமைதி"—"பஞ்சசீலம்"—"ஒத்துவாழும் பண்பு"—இப்படி எத்தனை கொள்கைகளை வலியுறுத்தி வந்திருக்கிறேன்! அந்தக் கொள்கைகட்கெல்லாம் அகிலமெங்கணும் கிடைத்துள்ள வரவேற்பென்ன! இன்று அவை கேலிக்கூத்தாக்கப்படுகின்ற கோரக் காட்சியென்ன! ஒப்பிட்டுப் பார்த்தால், நெஞ்சம் குமுறுகிறது—இதுவா அரசியல், இதுவா ஆட்சிப்பீடத்திலிருப்போர் கடைப்பிடிக்கின்ற பாதை, என்று என்னையுமறியாமல் கேட்டுக்கொள்கின்றேன்.

பஞ்சசீலக் கொள்கைதான் இன்றைய உலகினைப் போர்களிலிருந்து காப்பாற்றவல்லது என்று எடுத்துரைத்தேன்!—ஆம், ஆம்! என்று ஆமோதிப்பு வந்துகொண்டிருந்தது, உலகின் பற்பல நாடுகளிலிருந்தும்!

அந்த நாடுகளிலே ஒன்றுதான் சீனு!

அந்த நாட்டுப் பிரதமர் சூ-என்-லாய், இங்கு விஜயம் செய்திருக்கிறார், மூன்றாண்டுக்கட்டு முன்னர்!

பழைய வரலாற்றைப் பேசி மகிழ்ந்தோம் — இந்திய—சீன நட்புறவு பல நூற்றாண்டு காலமாக இருந்து வந்திருக்கிறது என்று போட்டியிட்டு எடுத்துக் காட்டிப் பெருமிதம் எய்தினோம்! "இந்தி—சினி பாய்! பாய்!" என்று முழங்கினோம்!

அந்தக் காட்சி இன்றளவும் என் மனக்கண் முன்னாலே நிற்கிறது!

அதே சூ-என்-லாய்தானு இப்போது இந்திய எல்லைக்குள்ளே படைகளை அனுப்பி ஆக்கிரமிப்பிலே ஈடுபட்டிருப்பவர், என்று என்னை நானே கேட்டுக்கொள்கிறேன்! என்னாலேயே நம்பமுடியவில்லை!

சோவியத் நாட்டுக்கு விஜயம் செய்த ஜார்ஜ் பெர்னார்ட்ஷா சொன்னாராம் ஸ்டாலினைப் பார்த்து, "இந்த ஆங்கிலேயர்களை நம்பாதீர்கள்! என்றும் துப்பாக்கியில் குண்டுகளைத் தயாராக வைத்திருங்கள்" என்று.

அந்த வாசகங்களை இப்போது யோசித்துப் பார்க்கிறேன்! ஆங்கிலேயரைப் பொறுத்தவரை அந்த வாசகம் சரியோ தவறோ, சீனத்தைப் பொறுத்தவரை சரியானது என்றுதான் நம்புகிறேன்!



"இந்தி — சினி பாய்! பாய்!" என்று சூ-என்-லாய் முழங்கிய அன்று என் பஞ்சசீலக் கொள்கைகட்கு மகத்தான ஆதரவு, கிடைக்குமென்று கனவுகூடச் காணமுடியாத இடங்களிலிருந்ததெல்லாம் கிடைத்திடுகிறது என்று பெருமைப்பட்டேன்—பெருமகிழ்வு எய்தினேன்!

ஆனல்... இன்று... இனி, என்ன செய்வது... என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருக்கிறேன்!

என் பஞ்சசீலக் கொள்கை தோல்வி அடைந்ததுபற்றிக்கூட அவ்வளவாக வருத்தமில்லை, எனக்கு!

இந்த நாட்டு எல்லையை எப்படிக் காப்பாற்றுவது—இதுதான் இன்றைய பிரச்சினை எனக்கு!

அமைதிக்கும் பங்கம் ஏற்படாமல், அரையங்குல நிலமும் இந்த நாட்டைவிட்டுப் போகாமல், எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பது எப்படி, என்பதுதான் தீராத தலைவலியாக இருக்கிறது!

சீனுவில் கம்யூனிஸ்ட் ஆட்சி நிறுவப்பட்டது முதல், நானும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறேன், செஞ்சீனுவுக்கு ஐக்கிய நாடுகள் சபையிலே இடமளித்தாக வேண்டுமென்று! அதைக் கேட்க நாதியில்லை!

என் கருத்து ஏற்கப்பட்டிருந்தால்—ஐக்கிய நாடுகள் சபையிலே செஞ்சீனுவுக்கும் இடம் தரப்பட்டிருந்தால்—இன்று, எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க எவ்வளவு எளிதிலே வழி பிறந்திருக்கும், அந்தச் சபையின் மூலம்!

அந்த வாய்ப்பையெல்லாம் கெடுத்துவிட்டன வல்லரசு நாடுகள் — கடைசியில் அவதியிலே இறக்கிவிட்டன இந்த நாட்டை!

இந்த நாடு விடுதலை பெற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள்! அதற்குள்ளாகப் புகழேணியின் உச்சியை எட்டிப் பிடித்தேன் — உலகின் எந்தத் தலைவனுக்கும் இல்லாத கீர்த்தி ஏற்பட்டது எனக்கு! ஆனல்... அந்தப் புகழ்... மெள்ள மெள்ள மங்கிவருவது தெள்ளத் தெளிய விளங்குகிறது! நாட்டின் உள்ளும் வெளியிலும் ஏராளமான எதிர்ப்புகள் எனக்கு!

ஆனல் நான்... அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை! எதிர்ப்பிலேயே வளர்ந்தவன் நான்· எதைப்பற்றியும் கவலைப்படாமல்!

நான் அஞ்சுவதெல்லாம் இந்த நாட்டு எல்லை பறிபோய்விடக் கூடாது—அதுவும் நான் ஆட்சிப்

(4-ம் பக்கம் பார்க்க)

"மனம் மாறவேண்டும்"

ர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (8–11–59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 17

நம்முடைய நாட்டின் பெருங்கேடுகளுள் ஒன்றாக நெடுங்காலமாக எடுத்துச் சொல்லப்பட்டு வருவது சமுதாயத்துள் உள்ள சாதிப் பிரிவாகும். தோளோடு தோள் இணைந்து தோழமை பூண்டு 'ஒன்றே குலம்' என்று முழங்கி வாழவேண்டிய சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வும் படைத்து, அதனால் பல இன்னல்களை விளைவித்து, முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாக இருப்பது சாதியாகும். சாதிப் பூசல்கள் ஆங்காங்கு அவ்வப்போது வெடித்து, பெரும் வேதனைகளை விளைத்து வருவதைக் காணுகின்றோம். வெந்தணலினும் வெப்பம் மிக்கதாய், நஞ்சினும் கேடு பயப்பதாய், சாதிப் பிளவின் விளைவு இருந்திடக் காணுகின்றோம். இந்தப் பெரும்புண் உடலின் மேலே உள்ளதானால், மருந்திட்டு, மாசுபோக்கி ஆற்றிட முனையலாம்.

ஆனால், இந்தப் புறப்புண்ணைவிட அகத்தில் இருக்கும் இன்னொரு புண்ணே சமுதாயத்தில் பெரும் வேதனையைத் தருகின்றது. மனிதனுக்கு அகத்தூய்மையும் தேவை, புறத்தூய்மையும் தேவை. திருவள்ளுவரும் இதனை வலியுறுத்துகின்றார். உடலுக்குப் பொருந்தும் இந்த உண்மை சமுதாயத்திற்கும் ஏற்புடையதாகிறது. சாதிப் பிளவுகளைப் புறப்புண் எனில், நம்மிலே ஒரு பகுதியினரை ஒதுக்கி வைத்து—வாழ்க்கையை ஒடுக்கிவைத்து—'தீண்டுவதும் ஆகாது' என்று வாய்கூசாது சொல்லிவருவது அகப்புண் எனலாம். புறப்புண்ணை ஆற்றுவதில் மிகுதியான வேகத்தைக் காட்டவேண்டும்.

இன்றைய தினம் கொள்கை அளவில் இதனை ஒப்புக்கொள்ளாதவர் இல்லை. ஆனால் நாட்டில் உள்ள உண்மை நிலையோ! எண்ணும்போதே நடுக்கம் தருகிறது.

> "கிராமங்களில் தீண்டாமை இப்போதும் உயிரோட்டத்துடன் இருக்கிறது. அரிசனங்கள் சமுதாய இழிவுகளால் வதைக்கப்படுகின்றனர்."

என்று மத்திய அமைச்சர் சகசீவன்ராம் அவர்களே அண்மையில் நடைபெற்ற மதுரை மாநாட்டில் கூறியிருக்கின்றார். எனவே இந்த நிலை இருப்பதைத் துணிவோடு உணர்ந்து, இது மாறிட என்ன வழி என்று ஆராயவேண்டும்.

'பணம்தான் பத்தும் செய்யும்' ஆகையால் பண வசதி கிடைத்தால். போதும், தீண்டாமை தீய்ந்துவிடும் என்று சிலர் கூறுகின்றனர். பணத்தின் ஆற்றல் பெரிதுதான். அதை மறுப்பார் இல்லை. ஆனால் நம்முடைய நாட்டில் உள்ள 'வருணாசிரமம்' பணத்தைவிட வலியதாக இறுகிப்போய்விட்டது என்பதை நாம் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளோம். பொருள் பெற்றால் மட்டும் போதாது — பிறப்பினால் உயர்வு—தாழ்வு பேசும் பேதைமை நீங்கினால்தான் உண்மையான சமத்துவம் தோன்றும். இல்லையேல் என்னதான் பணம் படைத்திருந்தாலும், பதவி பெற்றிருந்தாலும் தாழ்வு தாழ்வுதான்; உயர்வு உயர்வுதான் என்ற நிலைதான் நீடிக்கும்.

அண்மையில் மதுரையில் கூடிய அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் லீக் 16-ஆவது மாநாட்டைத் துவக்கிவைத்து உரையாற்றுகையில் இந்த வகையில் மத்திய அமைச்சர் சகசீவன்ராம் கூறிய சில கருத்துக்களை நாம் ஊன்றிப் பார்க்கவேண்டும்.

> "ஒருவர் பிறப்பைக்கொண்டு சமுதாயத்தில் அந்தஸ்த்தை நிர்ணயிக்கலாகாது. பண்பைக் கொண்டுதான் மதிக்கவேண்டும். **படித்த ஆதித்திராவிடன், படிக்காத பார்ப்பனனைவிடத் தாழ்ந்தவன் என்றிருக்கும் முறை ஒழியவேண்டும்.**"

பிறப்பினால் உயர்வு தாழ்வு பேசிடுவோரை இந்தச் சொற்கள் என்ன பாடுபடுத்தும்! தாழ்த்தப்பட்ட மனம் பொங்கி எழும்போது பீறிடும் உண்மை இது. இந்தப் பெரும் பணியைச் செய்வது என்றால் எளிதான செயல் அல்ல. எதிர்ப்பு எந்தப்பக்கத்திலிருந்தும் வரும் 'இந்து மதம்' தன் இரும்புப் பிடியைத் தளர்த்தினால் அல்லது இதனைச் செய்துமுடிப்பது எளிதல்ல. அமைச்சர் அதனை உணர்ந்திருக்கிறார்.

> இந்து சமுதாயத்தின் மதிப்புகளை மாற்றுவது இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கைகளான கர்மம், **மறுபிறப்பு என்ற கோட்பாடுகளைத் தாக்குவதாகும்.**

இந்த அளவுக்கு அது பெரிய பொறுப்பான பணி என்பதனை உணருகின்றார் அவர்... அதே நேரத்தில், எதையும் பொருட்படுத்தாமல், **இந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையே தாக்கினால்தான்** தாழ்ந்த இனம் உயரும் என்பதனையும் உணருகின்றார்.

> "இந்தச்சமுதாய கோட்பாடுகளை மாற்றினால் அல்லாமல், ஒடுக்கப்பட்டவர்கள் தலைதூக்குவது நெடுங்காலம் கழியும் கதையாகிவிடும்"

என்று நிலைமையை எடுத்து விளக்கிடுகின்றார்.

உண்மையான வளர்ச்சியைக் காணவேண்டுமாயின் இந்தப் பிரச்சினையில் 'சனாதனம்' விட்டுக்கொடுத்தாகவேண்டும். வேதம், புராணம் என்று வெட்டிப் பேச்சுப் பேசிக்கொண்டிராமல் சமுதாயத்தின் சரிபாதி தாழ்ந்து, தாழ்ந்து, அதனால் நாடு கேட்டில் ஆழ்ந்து அமிழ்ந்து போகாமல் இருக்க வழிவகை செய்யும் முறையில் **மனம் மாறியாகவேண்டும்.**

இன்றேல், சிலபேர் படித்தவர்களாகலாம்; சிலபேர் பணம் படைத்தவர்களாகலாம்; சிலபேர் செல்வாக்குப்பெறலாம்; சிலபேர் புகழும்பெறலாம். ஆனால் தனிமை — தீண்டாமை — நிலைத்துவிடும். எனவே மனம் திருந்தி 'தாழ்ந்தவனுக்கும் வாழ்வளிப்போம்' என்ற நல்ல எண்ணத்தை 'உயர்ந்தவர்கள்' கொண்டாகவேண்டும்!

✿

3-ம் பக்கத் தொடர்ச்சி

பொறுப்பிலே இருக்கிற காலத்தில்—எல்லையைக் காப்பாற்ற முடியாதவன் என்ற கறை எனக்கு ஏற்படக்கூடாது, வரலாற்றில்—என்பதற்குத்தான்!

நாட்டுப்பற்று கொண்ட எவருள்ளத்திலும் நியாயமாக ஏற்படுகின்ற பிரச்சினை இது!

என்ன ஆகுமோ? நானறியேன்!

ஆனால், எதைக் கொடுத்தும் எல்லையைக் காப்பாற்றச் சித்தமாக இருக்கின்றேன் — என் பின்னாலே நாடு இருக்கும், என் நடவடிக்கைகட்கு எல்லாவித ஆதரவும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்—என் உள்ளத்தில் ஏற்படுகிற உரிமை வேட்கை அனைவருள்ளத்திலும் ஏற்பட்டே தீரும் என்ற கருத்தில்! தவறில்லையே!

S. A. டாங்கே

இந்தத் துணைக்கண்டத்துக்கும் சீன நாட்டுக்குமிடையே எல்லைத் தகராறு! — ஆண்டாண்டு காலமாக, வெள்ளையன் ஆட்சிக் காலத்திலிருந்து, இரு நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற எல்லைக்கோடு, மாக்மோகன் லைன், சரியான எல்லைக் கோடுதான் என்று ஏற்றுக்கொள்ள மறுக்கிறது சீன நாடு! இந்திய நாட்டு எல்லைக்குள்ளே புகுந்து, எங்கள் எல்லைக் கோடு இங்கேதான், என்றுகூறி, இந்த நாட்டுப் பகுதிகள் சிலவற்றை ஆக்கிரமித்துவிட்டது, படை பலத்தைக் கொண்டு!

உலக சமாதானத்திலே, நாட்டம் கொண்ட எவரும், இந்தச் செயலை நியாயமானதென ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்—ஏகாதிபத்தியவாதிகள் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுவர், சீன நாட்டினரை!

அந்த அளவுக்கு அடாத செயலிலே இறங்கிவிட்டிருக்கிற நாடு செஞ்சீனவாக இல்லாமல், பாகிஸ்தானகவோ பர்மாவாகவோ இருந்தால், இந்த அளவு கவலையும் கலக்கமும் ஏற்பட்டிருக்காது, எனக்கும், என்னோடு கைகோர்த்து அரசியலிலே பணியாற்றுகின்ற பல்லாயிரக் கணக்கான தோழர்கட்கும்!

ஆனால் ஆக்கிரமிப்பிலே இறங்கியிருக்கிற நாடு சீன—கம்யூனிசத்தை அரவணைத்துக் கொண்டு, மிகவேகமாக முன்னேறி வந்திருக்கின்ற பூமி!

அது பெற்றிருக்கிற பொருளாதார முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டி, அதில் பத்திலேஒருமடங்குகூட இந்தப் பாரதம் பெற முடியவில்லையே என்று இடித்துக்கூறி வந்திருக்கிறோம், இதுவரை!

நாம் பிறந்த மண் முன்னேறவில்லையே, பின் தங்கிக்கிடக்கிறதே என்று வருத்தம்தான்! ஆனால், என்ன செய்ய? இங்ஙனம் இடித்துக் காட்டினலாவது இந்த நாடு விழிப்புறாதா, விழிப்புற்றபின்னர் வளம் பெறுதற்கேற்றவழி கம்யூனிசம்தான் என்று எண்ணிடாதா, எண்ணுகின்ற சூழ்நிலை ஏற்படாதா என்றொரு சபலம்!

அந்தச் சபலத்தின் பலனாக, "சீனவைப் பார், சீனவைப்பார்" என்று அந்த நாட்டைக் காட்டி வந்தோம், இந்த நாட்டுமக்களுக்கு!

ஆனல்...? நினைக்கவே நெஞ்சு வெடிக்கிறது!

"சீனவைப்பார்" என்று இனி எப்படி நாங்கள் சொல்ல முடியும் இந்த நாட்டு மக்கள் மத்தியில்? "சீனவைப்பார்!" என்று ஆரம்பிப்பதற்குள்ளே, "அது செய்து வருகின்ற அக்கிரமங்களைப்பார்! அதன் ஏகாதிபத்திய வெறியைப் பார்! இந்த நாட்டு எல்லையை ஆக்கிரமித்திருக்கின்ற அநியாயத்தைப்பார்! எல்லையிலே நிற்கவைக்கப்பட்ட இந்தியப் படையினரில் ஏறக்குறைய இருபதின்மர் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கின்ற சோகச் செய்தியைக் கேள்!" என்றல்லவா பதில் சொல்லி மாற்றார்கள் எங்களை அடக்குவார்கள்!

எந்தமுகத்தை வைத்துக் கொண்டு இனி மக்களைச் சந்திக்க முடியும், இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகள்?

இந்த நாட்டு எல்லைக்குள்ளே புகுந்துவிட்டிருக்கின்றனர் அந்நியர் என்ற செய்தியைக் கேட்டு, நாடே கொதித்தெழுகின்ற நிலைமை — தாயகத்தின்மீது பற்றுக்கொண்ட அனைவரும், நாடு காத்திடுவோம். ஆக்கிரமிப்பாளர் தம் கொட்டத்தை அடக்கிடுவோம் என்று போர்ப்பரணி கொட்டுகின்ற நேரம்—இருக்கின்ற பேதாபேதங்களை மறப்போம், எல்லையைக் காப்போம், என்று எல்லோரும் ஒன்றுபடுகின்ற வேளை இது!

ஆக்கிரமிப்பிலே ஈடுபட்டிருக்கிற நாடு சீனவாக, கம்யூனிசத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற நாடாக இருப்பதால், இந்த நாடு முழுவதுமே ஆவலோடு எதிர்பார்க்கிறது, இந்த நாட்டு கம்யூனிஸ்டுகள் இந்தப் பிரச்சினையிலே என்ன கருத்தைத் தெரிவிக்கிறார்கள் என்று! ஆக்கிரமித்தநாடு பாகிஸ்தானகவோ, பர்மாவாகவோ இருந்தால் கம்யூனிஸ்டுகளின் கருத்து என்ன என்று அறிந்திடுவதிலே இந்த அளவு ஆர்வம் காட்டப்பட்டிருக்காது என்பது மட்டுமல்ல, நாமும் இந்த அளவு காலம் தாழ்த்தியிருக்கமாட்டோம் நமது கருத்தைத் தெரிவிக்க! குரல் எழுப்பியிருப்போம், அனைவருக்கும் முன்னதாக—அனைவரையும்விட, சற்றுக் காரசாரமாக!

ஆனல் ஆக்கிரமிப்பிலே ஈடுபட்டிருக்கிற நாடு சீனவாக இருப்பதால், நமது கருத்து என்ன என்று கண்டறிவதிலே மிகுந்த ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது—நாமும் இதுவரை வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றோம்.

ஏற்கெனவே நம்மீது இருக்கின்ற பெரியதொரு பழியை, கறையை, நாம் அந்நிய நாட்டுத் தாசர்கள் என்ற கருத்தை, அப்புறப்படுத்த சூழ்நிலை ஏற்படுத்தியிருக்கிற சரியானதோர் வாய்ப்பு இது! அந்த வாய்ப்பினை நழுவவிடுவது நமக்கு மட்டுமல்ல, கம்யூனிசக் கொள்கைக்கே பெரியதோர் ஊறுதேடி வைப்பதாகும்!

இதையெல்லாம், மனதிலே வைத்துக்கொண்டுதான். ஓரிரு வாரங்கட்கு முன்னல், பகிரங்கமாகச் சீனவைக் கண்டித்தேன்—இந்த நாட்டு எல்லையினைக் காத்திட, ஆட்சிப்பீடத்திலிருப்போர் எந்தச் செயலிலே ஈடுபட்டாலும், அவர்களோடு ஒத்துழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அறிவித்தேன்! — பாராளுமன்றக்

(15-ம் பக்கம் பார்க்க)

இருப்பதும்—இல்லாததும்

ச. இராசகோபாலன்

"தன் நம்பிக்கை இல்லை!

மனச்சோர்வு நிரம்ப உள்ளது!

எங்கும் ஏழ்மையென்பதுதான் பேச்சு!

உள்ள வலிவும் போச்சு!

உலகத்தின் மத்தியில் நாம் ஒரு பூச்சிபோலத்தான் உழலுகின்றோம்!

வறுமையின் கோரப்பிடியில் இருந்து நாடு விடுபடவேண்டும்!

உற்சாகமிழந்த நிலையை மாற்றி நாட்டை உன்னதமாக ஆக்க வேண்டும்!

சாதி சமயப்பூசலில் இருந்து மக்களை விடுவிக்கவேண்டும். அதற்கு! சமதர்மம் அரசுக் கட்டிலில் அமரவேண்டும்!

மனிதனை மனிதன் சுரண்டி வாழும் மந்தமதி அகலவேண்டும்!

ஒருவனை ஒருவன்மட்டுமல்ல—ஒரு சாராரை மற்றொரு சாரார் அடக்கியாளும் ஆணவம் ஒழிக்கப்பட வேண்டும்!

ஆளவந்தார்களாக வீற்றிருப்போர் ஆட்சியில் திறமையில்லை!

நிர்வாகத்தில் நிறையக் கோளாறுகள் உள்ளன! மக்களின் தேவைகள் சரிவரக் கவனிக்கப்படாமையால் வந்த கோளாறுகள்தாம் இவைகள்.'' என்று அழுத்தந்திருத்தமாக அடிக்கடி சொல்லிக்கொண்டுதான் வந்துள்ளோம். அப்படிச் சொன்னதற்காக, சொல்லி வருவதற்காக ஆட்சியில் உள்ளவர்களால் வீசப்பட்ட 'கணைகள்' ஏராளம்!

"நாங்களா நிர்வாகத்திறமையற்றவர்கள்?

நாங்களா ஊதாரிகள்?

நாங்களா மக்களின் துயரை உணராதவர்கள்? எங்களைவிடத் திட்டம் தீட்டுபவர்கள் — திறமைசாலிகள் இந்த நாட்டில் ஏது? என்ற கர்வக் கணைகளையும், அவர்கள் ஏவத் தவறியது கிடையாது. டில்லியும், அதன்கீழ் பணியாற்றும் காங்கிரஸ் தலைவர்களும் தங்களை விட்டால் இந்த நாட்டிற்கு விமோசனமே கிடையாது என்று அவ்வப்போது உரத்த குரலில் சொல்லிக்கொள்ளத் தவறியதில்லை.

அப்படியிருந்தும் உண்மை நிலையை. நாம் முதலில் குறிப்பிட்ட மனச்சோர்வு மக்கள் மத்தியில் பெரும் அளவு பெருகிவருகின்றது என்பதை மூடிமறைக்க யாராலும் முடியவில்லை. படித்த நடுத்தர மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், இவர்கள் தினம் தினம், தன்நம்பிக்கை இழந்து செத்துக்கொண்டுதான் வருகின்றனர் என்று நாம் சொல்லிவருகின்றோம்.

வாழ்வு கசந்துவிட்டது; தூக்குப் போட்டுத் தற்கொலை.

படித்தேன் வேலையில்லை; அதனால் இரயிலில் வீழ்ந்து சாவு.

கையில் காசு இல்லை, கடன் கொடுப்போர் யாரும் இல்லை. அதன் பொருட்டு நஞ்சு அருந்தித் தற்கொலை.

வாங்கிய கடனைத் திருப்பித்தர வக்கில்லை; அதனால், மரக்கிளையில் மனிதன் பிரேதம். இவைபோன்ற ஆயிரமாயிரம் எடுத்துக்காட்டுகள்—எவ்வளவுதான் சொல்லப்பட்டு எழுதப்பட்டு வந்தாலும் இதுவரையில் அவை அசல முயற்சிக்கவில்லை ஆட்சியினர்...... இது ஒருபுறமிருக்க;

> ...இந்திய உபகண்டம் பூராவும் உள்ள மக்கள் மனப்பான்மையைக் கேள்விகள் கேட்பதின் மூலமாகத் திரட்டித் தந்திருக்கின்றார் ஓர் பெரியவர்!

கேள்வியாம்! பெரியவராம்! ஆச்சரியப்படவேண்டாம், யாரடா இந்தப் பெரியவன்? சாக்ரடீசா! அல்லது வேறு யாராவது வித்தகரோ என்று. கடந்த முதல் உலக மகாயுத்தத்திற்குப் பிறகு லாகூரில் உள்ளகல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவர்தான். இந்த நாட்டு மக்கள் வாழ்வில் தன் வாழ்நாளின் பெரும்பகுதியை கழித்தவர்தான். கொள்கையிலும் நடைமுறையிலும் தத்துவ ஞானி சாக்ரடீசுக்கு ஒப்பானவர்தானும்! அமெரிக்கன் ரிப்போட்டர் என்ற ஏடு செப்புகின்றது, அவரைப் பற்றி. ஆசியஜோதி நேரு முதல்கொண்டு, இந்த நாட்டில் உள்ள அறிஞர்கள், கலைஞர்கள் எழுத்தாளர்கள் அரசியல்வாதிகள் அனைவரிடமும் கண்டு பேசியவற்றைக்கொண்டு தன் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்:

> "...ஊக்கம், கவலை, கோபம், தோல்வி மனப்பான்மை ஆகியவற்றை இந்தியாவில் நான் நிரம்பக் கண்டுள்ளேன்...

ஊக்கம் உண்டாம், ஆனால் கவலை பற்றிக்கொண்டிருக்கின்றதாம்!

கோபம் அதிகமாகக் காணப்படுகின்றதாம்!

தோல்வி மனப்பான்மை மக்களிடம் பெருமளவில் குடிகொண்டுள்ளதாம். இப்படிச் சொல்லுகின்றார் அமெரிக்க நாட்டுச் சாக்ரடீஸ். அவர் பெயர், டாக்டர் கிரீன். இந்த விஷயத்தை வெளியிட்டிருக்கின்றார்.

எப்போதும் குறைகூறிக்கொண்டிருக்கும் எதிர்க்கட்சிக்காரர்கள் பட்டியலில் இடம் பிடித்துக் கொண்டவரல்ல அவர். மாஸ்கோ மணம் பரப்பிவருவோர் பட்டியலில் சேர்ந்தவரல்ல.

நாடாள்வோர்களால் நாமாவளி பாடப்படும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்தான்.

நித்தமும் துதிபாடும் நேரு அவர்களின் நெருங்கிய நட்புக் கொண்ட நாட்டைச் சேர்ந்தவர்தான் கிரீன். அவரே தான் சொல்கின்றார் மேற்கண்ட அவலநிலையை.

ஊக்கம் உள்ள மக்கள் ஏக்கம் கொண்டு வாடுகின்றனர் என்கிறார்! வசதியுள்ளவர்கள் வாட்டமுறுவது போலல்லவா இது இருக்கின்றது என்று எண்ணிடத் தோன்றுகிறது நமக்கு. உழைப்பதற்கு உடல் இருந்தும், உண்ணுவதற்கு உணவின்றி வாடுவோர் ஏராளம் உள்ளனரே! ஏன்? என்று நாம் கேட்டால் சீறுவோர்தான் "கிரீன்" அவர்கட்குக் கைலாகு கொடுக்கின்றனர்!

திண்தோள்களையும், உறுதிஉள்ள கரங்களையும் கொண்டவர்கள் உண்ண உணவின்றி வாடும் நிலையை நாம் சொல்லாத நாள் இடையாது.

ஆடை நெய்யும் தொழிலாளி அவதிப்படுவதை ஆயிரம் முறை சொன்னோம்.

கையிலே உழைப்பிருந்தும் மெய்யிலே ஏக்கத்தோடு வாழ்பவர்கள் எண்ணற்றவர்களைப் பற்றி எண்ணாத நாள் கிடையாது நாம்.

பாடுபட்டவர்கள் பருக்கைக்கும் வழியின்றி, பரிதவிக்கும் நிலையைத் தினம் தினம் சொல்லி வந்த நமக்கு —நாட்டையாள்வோர் தங்கள் சீற்றத்தைத்தான் பரிசாகத் தந்தனர். ஆனால், அவர்—கிரீன் சொல்லும் போது மௌனம் சாதிக்கின்றனர். தோல்வி மனப்பான்மையாம், தொல்லையாம்—என்னத்தைதக் கண்டுவிட்டார் இவர் என்று ஒதுக்கித்தள்ளிவிடமுடியுமா? என்றாலும்அவர் சாதாரணமாக இவைகளைச் சொல்லவில்லையே!

"நேரு முதல் சாதாரன மக்கள் வரை சந்தித்து உரையாடினாராம்; உரையாடும்போது, தன் வசப் படாமல் இருக்கும் பொருட்டும், தன் கேள்விக்குச் சாதகமாக பதில் அமையாமல் இருக்கும் பொருட்டும் ஏற்ற வழியைக் கடைபிடித்தாராம். ஐந்து புத்தகங்கள் வரையிலும் தான் சேகரித்த கருத்துக்களைத் திரட்டி வைத்திருக்கின்றாராம். தன் வேலை முடிந்துவிட்டதும் தாயகம் திரும்பப்போகின்றாராம். தற்போது அமெரிக்காவில் இருந்து வந்ததே இந்தக் கருத்துக்களைக் கண்டறியவேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான் என்று அவரே சொல்லியிருக்கின்றாராம்.

தன்நம்பிக்கை குன்றிப்போய் இருக்கின்றது என்றுஅவர் சொல்வதில் எவ்வளவு உண்மை இருக்கின்றது என்று பாருங்கள். இந்திய உபகண்டத்தில் யாரிடம்தான் நம்பிக்கை உள்ளது?

உழைப்பாளி எப்போது இந்த உலகத்தில் இருந்து விடுதலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றான்.

படிப்பாளிஎப்போது'பரந்தாமன்' பாதாரவிந்தங்களைச் சரணடைவோம் என்றுதான் பஜனைபாடிக் கொண்டிருக்கிறான்.

நடுத்தரமக்கள் தங்கள் பிரச்சினையைத் தீர்க்க நாதியற்றுக் கண் கலங்கியபடி தானே வதிகின்றனர்.

அதுமட்டுமா? அரசியல் தலைவர்களாவது தன்நம்பிக்கையோடு இருக்கின்றார்களாவென்றால், அது தான் இல்லை. நமக்கு இன்றோ நாளையோ இந்தச் சுகம் என்ற அச்சமே அவர்களை பிய்த்துத் தின்றுகொண்டிருக்கின்றது. அவர் சொல்வதுபோல எதிலும் தன்நம்பிக்கை இழந்துதானே காணப்படுகின்றது.

நிம்மதியாகக் கவலையற்று வாழ்வோர்களைக் காணுவது என்பது குதிரைக் கொம்பாகத்தானே உள்ளது. எதனால் என்ன காரணத்தால் இவைகள் என்று எண்ண வேண்டும் என்ற ஆராய்ச்சிக்காக அல்ல இவைகளை எடுத்துக்காட்டுவது! இவ்வளவு காலமாக நாம் இந்த நாட்டில் அனுபவித்துவருவதுதானே இவைகள்? ஆனால், கிரீனுக்குதான் இவைகள் புதிதாகத் தோன்றுகின்றன.

அவர் வெளிநாட்டுக்காரர் என்பதனால் தோன்றிற்று என்று எண்ணவேண்டாம்.....அதற்கான காரணங்களையும் அவர் விளக்குகின்றார். இவர் என்னைய்யா நம்மவர்க்குக் காரணங்கள் சொல்ல—என்ற கோபம்கூடப் பொத்துக் கொண்டுவரும் ஆட்சியின் மாட்சியாளர்கட்கு.

"இந்திய நாட்டைப் பாராதவர்கள் யார்? டிட்டோ வந்தாரே! பட்டம் பகலில் பாதையில்தானே மக்களைப் பார்த்தவண்ணம் பவனிவந்தார். அவர் கண்ணிலே, காதிலே இந்தச் சேதிகள் விழுந்திருக்காதோ? புல்கானின் குருஷேவ் இவர்கள் வரவில்லையா? சுற்றுப் பயணம் செய்யவில்லையா? இன்னும் எண்ணற்றவர்களின் இதயத்தைக் கவர்ந்த இந்த ஆட்சியை இந்தச்சாதாரண எத்தர்தான் இறுமாந்து கூறுகின்றார் என்று கூட எண்ணத் தோன்றும். ஆனால்; அடுத்துவரும் அவரின் ஆலோசனையைக் கேட்டால் ஆர்ப்பரிக்கக்கூடச் செய்வார்கள்.

"தளபதிகள் நிறைய இருக்கின்றார்கள். சார்ஜென்டுகள்தான் வேண்டும்" என்பது அவர் எண்ணம். இராணுவ உதாரணம்தான் என்றபோதிலும், நாட்டிற்கு எவ்வளவு பொருந்தும் என்பதை வாசகர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தளபதி போடுகிற உத்தரவை அமுலாக்கத் தக்க சார்ஜென்டுகள் மிகவும் அவசியம். ஆனால், அந்த சார்ஜெண்டுகளோ......! பதவி ஆசை ஒருவருக்கு. எதிரியிடம் பல் இளிக்கவேண்டும் என்ற ஆசை மற்றொருவருக்கு. மதுக்கடையிலே கோப்பையை உறிஞ்சிவிட்டு மாது சிரோன்மணிகளோடு உல்லாசமாக இருக்கும் ஜோக்குப்பேர்வழி மற்றொரு சார்ஜெண்ட், என்றால் படைபலம், நிலை இழக்காமல் என்ன செய்யும்?

பார்க்கின்றோமே, தளபதி நேருவின் படைவரிசையை. அவரின் கீழ் பணியாற்றும் சார்ஜெண்டுகளின் இலட்சணம்தான் தெள்ளத் தெளிவாக விளங்குகின்றதே!

பதவி ஆசை, பகட்டுகாரர்கள், பராக்குக்கூறிப் பிழைப்பவர்கள், சொந்தநலனுக்காகச்சுதந்திரத்தை இழக்கக் காத்திருப்பவர்கள், பர்மிட் கிடைத்தால் போதும் என்று வாழ்பவர்கள், எவ்வளவு இழி செயல் புரியலாமோ அவ்வளவையும் செய்து வாழ்பவர்கள், இன்னும் அந்தக் காங்கிரஸ் சார்ஜண்டுகள், நடத்தி வருகிற கொடுமைகள் ஏராளம்,

அவர் சொன்னது இல்லாததல்ல, இருப்பவைகள்தான் என்றாலும், எந்த எண்ணத்தோடு எத்தகைய சூழ்நிலையில் மனதைப் பதியவைத்துசொன்னார் என்பதையும் நாம் கொஞ்சம் யூகிக்கவேண்டும். நாட்டை ஆள்கிற கட்சியின் அஸ்திவாரமாக இருப்பவர்கள், அதாவது காங்கிரஸ்காரர்கள் இருக்கின்ற நிலையை எண்ணிப் பார்த்திருப்பார். உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியும் அவர்களின் போக்கினை நன்கு படம் பிடித்திருப்பார்.

அதனால்தான் தளபதிகள் இருக்கும் அளவிற்கு அவர்களின் சார்ஜெண்டுகள் இல்லையென்று அவர் துணிந்து உரைக்க முடிந்தது.

உத்தரவு இடுகின்றவர்கள் மட்டும் இருந்தால் போதுமா? என்று நாம் சொன்னபோது நாத்தடிப்பாளர்கள் என்று நய்யாண்டி செய்தார்கள்; இப்போது "கிரீன்" சொல்கிறார் பேச்சில்லை, மூச்சில்லை! நன்றாகத் தெரிகின்றதே ஆள்பவர்கள் கொண்டுள்ள எண்ண பேதம்.

தலைவருக்கும் காரியதரிசிக்கும் கொள்கைபேதம்.

சமதர்மம் என்று ஒருவர் சொல்வார், மற்றொருவர் அதுவா என்று ஆர்ப்பரிப்பார்.

நிலச் சீர்திருத்தம் என்று நேரு சொல்வார். நிலதடுமாற்றம் அவருக்கு என்று இன்னொருவர் பகர்வார்!

கூட்டுறவு வேண்டுமென்று கோலோச்சுபவர்கள் சொன்னால், கொடியேந்திகள் கூடாது, அடாது என்று அடங்க மறுப்பர்.

இந்தி வேண்டாமென்று நேரு முழங்கினால், நேருவையே நேருக்கு நேராகச்சாடுவர், அவரின் தலைமையில் இருக்கும் சாதாரணமானவர்கள்,

மதமற்ற ஆட்சிதான் மாட்சி தரும் என்று ஆள்பவர்கள் சொல்லிவந்தால், மதம்தானே எங்களின் மாமருந்தென்று மற்றவர்கள் எகிறிக் குதிப்பர்.

நாட்டில் தேசிய உடைமையாகத் தொழில் உலகம் ஆகவேண்டுமென ஒருவர் சொல்வார், உடனே; ஆகாது, அடாது என்று அலறுவார்கள் மற்றவர்கள்.

சாதிகள் ஒழியவேண்டும்; சட்டம் வேண்டுமென இளையவர்கள்சொன்னால், மூத்தவர்கள் என்ன ஆணவம் இது? சாதியாவது ஒழியவாவது! விடமாட்டோம் இதனையென்று முகாரி பாடுவார்கள்.

இலஞ்சம் வாங்கக்கூடாது என்று ஆள்பவர்கள் சொன்னால், அதுதானே எங்களை வாழவைக்கிறது என்று அவர்களின் தலைமையிலேயே ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

பதவி மோகம் கூடாது என்று தளபதி சொன்னால், அதற்காகத்தானே உங்களுக்கு நாங்கள் கைதூக்கிறோம் என்று சார்ஜெண்டுகள் சொல்வர்.

பர்மிட் ஆசையை விட்டொழியுங்கள் என்று பாராளும் தலைவர்கள் சொன்னால், உங்கள் பாதாரவிந்தப் பஜனைபாடுவதே பர்மிட் வேட்டைக்காகத்தானே என்று பல்லவி பாடுகின்றனர் பாதம் தாங்கிக்கொண்டிருப்பவர்கள்.

இதைப்போல் இன்னும் ஆயிரங் காரணங்கள் நம்மால் விளக்கிக் காட்டமுடியும்.

இவைகளைக்கண்டுதான் போலும், தளபதிகள் இருக்கும் அளவிற்கு இந்த நாட்டில் சார்ஜெண்டுகள் இல்லையென்று அவர் உரைத்திருப்பது!

எல்லாவற்றையும்விட விந்தை தருவதுதான் மற்றொன்று, அதையும் அவரேதான் குறிப்பிட்டிருக்கின்றார்.

குட்டி "நேருக்கள்" தேவையென்று, ஆசியாவின் ஜோதி! அகில உலக சமாதானத் தூதுவர், அமெரிக்காவின் அன்புக்குரியவர், இரஷ்யாவின்நண்பர், இந்தியாவின்ஏகப்புதல்வர், காந்தியவாரிசு, கலங்காத நெஞ்சுரங்கொண்டவர், இத்தகைய நேருவுக்கு நேர் இந்த நாட்டில் யார் இருக்கின்றார்கள் என்று நெஞ்சு வெடிக்கக் கூறிக்கொண்டிருக்கும் காங்கிரஸ்காரர்கள் மத்தியில்தான் "குட்டி நேருக்கள், தேவை"யென்று ஆசைப்படுகின்றார், அமெரிக்க ஆசிரியர் கிரீன்.

ஏன் தேவை?

எதற்காகத் தேவை? என்பதற்கெல்லாம் இனி விளக்கம்தரத் தேவையில்லையல்லவா? எல்லாம் சொல்கிற அவரேதான் அந்த முடிவிற்கு வந்திருக்கின்றார்.

இருக்கிற நிலையையும் சொல்லி நாட்டில் குறிப்பாகக் காங்கிரஸில் இல்லாத—இனியும் கிடைக்க முடியாத நேருவை — குட்டி 'நேரு'க்களைத்தான் தேடுகிறார்!

நேரு போன்றவர்கள் ஆளும் துறையிலே ஏராளமானவர்கள் இருந்தால் — அதாவது அவருக்கேற்ற ஆட்சித் துணைவர்கள் கிடைத்தால் நாடு உருப்படும் என்பது கிரீன் போன்றவர்களின் ஆசையும் அபிப்பிராயமுமாக இருக்கலாம். வெளிநாட்டுக்காரர் அப்படி எண்ணுவதிலே ஆச்சர்யம் ஒன்றும் இருக்கமுடியாது அல்லவா? ஆனால், நிலைமையை— ஆட்சியாளரின் அன்றாட நடவடிக்கைகளை—ஆளும் போக்கினை உடனுக்குடன் கூடவே இருந்து கவனித்து வருபவர்களுக்கல்லவா கிரீன் போன்றவர்களைவிட நாட்டின் உண்மையான படப்பிடிப்பை உள்ளபடியே காணவும் உணரவும் அதை உலகுக்கு எடுத்துக்கூறவும் முடியும்.

தளபதியை—தனக்குப்பின் தலைவனாகக்கூடிய தகுதியைத் தன்னோடு இருப்பவர்களுக்கு உண்டாக்கவேண்டும். உண்டாக அனுமதிக்கவேண்டும் என்ற அந்த நல்ல பண்பு இந்த நாட்டில் இன்னும் சரியாக வளரவில்லையே! இதை முதலில் கிரீன் போன்ற நடுநிலைமையாளர்கள் தெரியவும் புரியவும் வேண்டுமே! அதன் பிறகல்லவா இந்த யோசனையும் யூகமும் பயன் அளிக்கும்!

"நேருவுக்குப் பின் யார்?" இது இன்றுவரை கேள்விக்குறியாகவே இருந்துவருகின்ற உண்மையைக் கிரீன் தெரியாததால்தான் இவ்விதம் கூறுகின்றார் என்பதல்ல. நாட்டின் நல்ல எதிர்காலத்தைக் காணவேண்டுமென்ற ஆசையால்தான் இவ்விதம் கூறுகின்றார் என்று நாம் நம்புகின்றோம்—நல்லவர்கள் நாட்டை ஆளும் நிலை ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறோம்.

✽

"வெள்ளி விழா"

"சார் மளிகைக் கடையில் பலசரக்கு வாங்கிய வகையில் உங்கள் பெயருக்கு அறுபது ரூபாய், பதிநான்கு காசு, கடன் இருக்கிறது. இன்று கண்டிப்பாக வாங்கி வரும்படி முதலாளி சொன்னார்கள்.'' மளிகைக் கடைச் சித்தாள் மாரியப்பன் கணக்குப் புத்தகத்தோடு வந்து நின்றான். ஒட்டுத் திண்ணையில் அமர்ந்து காய்ந்துபோன வெற்றிலைச் சருகுகளை அசைபோட்டுக்கொண்டிருந்த ஆசிரியர் முனியாண்டி, மாரியப்பனின் வாயிலிருந்து தெறித்து விழுந்த வார்த்தைகளையும், அவன் நின்ற தோற்றத்தையும் கண்டு அசந்துவிட்டார்.

ஆளுகின்ற அமைச்சர்கள் செல்கின்ற இடமெல்லாம் சிறப்பாகப்பேசிவருபவைகளில் பள்ளிகளில் இலவசமாகப் போடப்பட்டுவரும் பகலுணவுத் திட்டமும் ஒன்று. "நாங்கள் நாடாளவந்தோம்;பள்ளிச் சிறுவர்களுக்கு இலவசமாகப் பகலுணவு போடுகிறோம்--கட்டணமில்லாமல் படிக்க வைக்கிறோம். எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன செய்துவிட்டார்கள்'' என்று பெருமையோடும் பூரிப்போடும் பேசுகிறார்கள். ஆனால் அந்தத் திட்டம் செயல்படும் முறையும்—அதனால் தொல்லைப்படும் ஆசிரியர்கள் நிலையும் அவர்கள் கண்களுக்குத் தெரிவதேயில்லை. பொதுமக்களும் அவர்கள் கூற்று உண்மைதானா என்று எண்ணிப்பார்ப்பதுமில்லை.

பகலுணவுக்காக ஒரு மாணவனுக்கு ஒரு நாளில் ஒரு வேளைக்கு அரசாங்கம் தரும் பணம் ஒரு அணா. அவாவது ஆறு புதிய காசு! இந்த ஆறு புதுக் காசுடன், ஆசிரியர் வீடு வீடாகச் சென்று பல்லைக்காட்டிக் கெஞ்சி மேலும் நான்கு புதுக்காசு பிச்சை எடுக்க வேண்டும். அரசாங்கம் தந்த ஆறு காசுடன் பிச்சை எடுத்த நான்கு காசையும் சேர்த்துப் பத்துக்காசுக்குள் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு ஒரு தடவை பசலுணவு போடவேண்டும். இதற்குரிய வரவு செலவு தொகைகளை ஏட்டில் குறித்து அரசாங்கத்துக்கு அனுப்பவேண்டும். இந்தச் செலவுக்குரிய பணம் ஒருமாதமோ அல்லது இரண்டு மூன்று மாதங்களோ கழித்துத்தான் வரும். அது வரை பொறுமையைக் கடைப்பிடித்துக் கடன் வாங்கியாவது சாப்பாடு போடவேண்டும். போடத் துணிவில்லாத பள்ளிகளுக்கு அரசாங்க உதவி கிடையாது.

வேடநத்தம் வேலப்பர் பள்ளியை வீழ்ச்சியடையாமல்—அது வெற்றிப் பாதையில் செல்லவேண்டும் என்பதில் தணியாத ஆர்வமும், நடத்தும் ஆற்றலும் கொண்டவர் ஆசிரியர் முனியாண்டி.

நா. புகழேந்தி

ஊரில் ஒருவருக்கொருவர் குடும்பச் சண்டைகளை முன்னிறுத்திப் போட்டியையும் பொறாமையையும் வளர்த்துக் கொண்டிருந்தார்களே தவிரப், பள்ளியின் வளர்ச்சியில் அக்கரை காட்டவே இல்லை. ஆசிரியர் முனியாண்டி மட்டும் தலைமையாசிரியராக அந்த ஊருக்கு வந்திருக்காவிடில்,இதற்குள் பள்ளியே இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கும். பள்ளி வளர்ச்சியில் அக்கரையும் ஆர்வமும் கொண்ட ஆசிரியர் முனியாண்டி, அரசாங்கத்தின் பகலுணவைத் திட்டத்தை ஏற்காமல் விடுவாரா? ஏற்றுக்கொண்டார்!

ஊரிலுள்ள பெரிய மனிதர்களின் வீட்டுப்படிகளில் ஏறி இறங்கினார். இரு கையேந்தி நன்கொடை கேட்டார். "என்னையா பணம் பணம்னு பிச்சுப் பிடுங்கிறே, சர்க்கார்தான் பணம் கொடுக்குதே...அதை வச்சு நடத்தப்படாதோ? உங்களுக்குச் சம்பளம் போதாவிட்டால் சர்க்காரிடம் கேளுங்கய்யா...இப்படிப் பிள்ளைகள் பெயரைச் சொல்லிப் பணம் பிரிச்சு உங்கள் வயித்தை நிரப்ப வேண்டாம். இது ஈனத்தனமான பிழைப்பு.'' உண்மையை உணராத பெரியவர்கள் இப்படிப்பட்ட கடுமையான வார்த்தைகளைக்கூறி ஆசிரியர் முனியாண்டியை வெளியேற்றினார்கள்.

இளகிய மனம் படைத்தவர் ஆசிரியர் முனியாண்டி. ஈட்டிபோல் குத்திக் கிளறும் கொடிய வார்த்தைகளை அவரால் தாங்க முடியவில்லை. நன்கொடை பிரிப்பதென்பது நடவாத காரியம்! அதற்காகப் பகலுணவுத் திட்டத்தைக் கைவிடவும் மனமில்லை. தன் பொறுப்பில் பலசரக்கு மளிகையில் சாமான்கள் வாங்குவார். மாதம் பத்து இருபது வரும். சம்பளம் வந்ததும் கொடுத்துவிடுவார். இப்படியாகத் தன் சம்பளத்தில் மாதா மாதம் பத்தோ இருபதோ தியாகம் செய்து பகலுணவுத் திட்டத்தை நடத்தி வந்தார். அதன் பயனாக மூன்று மாதத்துக்குள் பற்று வரவு போகப் பாக்கியாக--கடனாக மளிகைக்கடைக் கணக்குப்புத்தகத்தில்போய் ஏறிய தொகைதான் அறுபது ரூபாய், பதிநான்கு காசு! ஆளவந்தார்கள் பெருமையாக வெளியில் பேசிக்கொண்டே ஊர் சுற்றுகிறார்கள். அந்தத் திட்டம் நடைமுறைக் கோளாறினாலும், நல்லாட்சி இல்லாததினாலும் கடன் என்ற கயிறாக வந்து முனியாண்டி போன்ற ஆசிரியர்களின் கழுத்தை இறுக்குகிறது. அவர்கள் கண் விழிபிதுங்க விழிக்கிறார்கள்.

"என்ன்சார் பேசாமல் இருக்கிறீர்கள்? எனக்கு நேரமாகிறது. உங்களைப்போல இன்னும் பல பேரிடம்போய்க் கடன்பிரிக்கவேண்டியிருக்கிறது'' என்று அவசரப்படுத்தினான் மாரியப்பன், "தம்பி!

இப்போது கையில் காலணாக்கூட இல்லை. அடுத்த மாதம் கண்டிப்பாகத் தருகிறேன். இந்த ஒரு தடவையும் பொறுத்துக்கொள்ளும்படி முதலாளியிடம் சொல்'' என்று சிறுபிள்ளையைக் கெஞ்சுவதுபோல மாரியப்பனைக் கெஞ்சினார் முனியாண்டி!

"என்னசார்... இப்படிச் சாக்குப் போக்குச்சொல்கிறீர்கள். நேற்றுத்தானே சம்பளம வாங்கியிருப்பீர்கள், அதற்குள் பணம் எங்கே போய்விட்டது'' என்று அதட்டினான் மாரியப்பன். "சம்பளமா... நேற்றா...என்ன தம்பி! சம்பளம் வாங்கியிருந்தால் கடைப்பக்கம் வராமல் இருப்பேனா, சம்பளம் வாங்கியே மாதம் இரண்டாச்சு, இப்போது வரும், பிறகு வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கிறேன். சம்பளம் இன்னும் வந்தபாடில்லை''...என்று வேதனையோடு சொன்னார் முனியாண்டி!

"என்னசார் எப்போது பார்த்தாலும் இந்தப் பஞ்சப் பாட்டுத்தானா? இது தவிரச் சொல்வதற்கு வேறு புதிய காரணம் எதுவும் இல்லையா?

"என்ன தம்பி செய்கிறது...!எங்களுக்கு இந்த அரசாங்கம் கற்றுக் கொடுத்ததுப் பஞ்சப்பாட்டுத்தான். உண்டாக்கியிருப்பதும் பஞ்சப் பாட்டுத்தான். வாத்தியார் தொழிலுக்குப் படிக்கிறதை விட்டுவிட்டு, கலப்பையும் தோளுமாகக் கழனிகளில் திரிந்தால்கூடக் கால்வயிற்றுக் கஞ்சியாகிலும் நிம்பதியாகக் கிடைக்கும். கைவண்டியிழுத்து கடைத்தெருவில் மூட்டை சுமந்தால்கூடக் கவலையில்லாமல் வாழலாம். உன்னைப்போல கடையிலே தராசு பிடித்துப் பழக்கப்பட்டிருக்கலாம். கூடைகளில் காய்கறிகளை நிரப்பிக்கொண்டு தெருவழியே சென்று விற்று நிம்மதியாகப் பிழைப்பு நடத்தலாம். தெரியாத்தனமாக இந்த வாத்தியார் வேலைக்குப்படித்துவிட்டுச் செருப்புத்தேய்வதுபோல நாளுக்குநாள் நான் தேய்ந்துகொண்டேயிருக்கிறேன்.''

"இப்படி அலுத்துச் சலித்துப் பேசாதீங்க சார். எழுத்தறிவித்தவன் இறைவன் சார்; இறைவன்! இதை எண்ணிப் பெருமைப்படுங்கள்.''

பேசாதஇறைவனைக்கோவிலுக்குள் இருந்தால் நீ சொல்வது பொருந்தும். தேங்காய் பழம்—தட்சணைகள் உருளும்—விழா நடக்கும் வெள்ளிப் பல்லக்கு வலம் வரும். நான் பேசுகிறவன். தொண்டை கிழியக் கத்திக் கத்தி இரத்தம் கக்குகிறவன். என்னை யார் தம்பி, இறைவன் என்று மதிக்கிறார்கள்? பிள்ளைகளின் பெற்றோர்கள் பள்ளிக்குள் நுழையும்போதே என்னை ஒரு மிருகமாக எண்ணிக்கொண்டுதான் உள்ளே நுழைகிறார்கள். கேள்வியும் கேட்கிறார்கள். என் பிள்ளை வாழையிலையில்தான் சாப்பிடுவான், இதை வாங்கிப்போடப் பள்ளிக்கூடத்தில் வக்கில்லையா?, என்று சிலரும், என்னைய்யா சாப்பிடுகிற பிள்ளைகளுக்கு நூறு தட்டும் டம்ளரும் வாங்கக்கூடாதா, வீட்டிலிருந்து வட்டிலையும் டம்ளரையும் தூக்கிக்கொண்டு வரச் சொல்கிறீர்களே! தெருவிலே இந்தக் கோலத்தோடு பிள்ளைகள் வருவது உங்களுக்கே அவமானமாகப் படவில்லையா, என்று சிலரும், கறியில் உப்புண்டா...உறைப்புண்டா? இதைப் பிளளைகளுக்குப் போட்டு உடலைக் கெடுக்கிறார்கள் என்று சிலரும், அரிசியில்கிடக்கும்கல்லைப் பொறுக்கிப் போட்டால் என்ன...? என்று சிலரும் எங்கள்மேல் சீறி விழுகிறார்கள். எழுத்தறிவித்தவனை இறைவனாக வேண்டாம், மனிதனாகக்கூட எண்ணுவதேயில்லை! சமையல்காரனைப்போல எண்ணிக் கேள்விமேல் கேள்வி போடுகிறார்கள். இப்படிப் பல தொல்லைகளையும் தாங்கிக்கொண்டு துணிந்து பணியாற்றும் ஆசிரியர்களுக்கு உடனுக்குடன் சம்பளம் கொடுக்கக்கூடாதா...? இரண்டு மாதம் மூன்று மாதம் கழித்துத்தான் வருகிறது.

சம்பளம் வரும் வரை குடும்பத்தை நடத்தியாகவேண்டும். அதன் எதிரொலிதான் பால்காரனிடம் கடன் — முடிதிருத்துபவனிடம் கடன்—துணி வெளுப்பவனிடம் கடன் — வைத்தியனிடம் கடன், பலசரக்குக் கடையிலும் கடன். கடன் கடன் கடன்... கடன்..நாட்டில் வாழ்வதே தாங்க முடியாத கடன்தான்.'' ஆசிரியர் முனியாண்டியின் இதயத்திலிருந்து பீறிட்டு வந்த வேதனையின் அறிகுறியாக இரண்டு சொட்டுக் கண்ணீர் கண்களிடமிருந்து விடைபெற்றுக் கீழே விழுந்தது.

கடன் பிரிக்க வந்த மளிகைக் கடை மாரியப்பன் கண்களும் கலங்கிவிட்டன. காரணம் அவனும் ஏழை. "சரிசார்...வருத்தப்படாதீங்க, முதலாளியிடம் நிலைமையை விளக்கிச் சொல்கிறேன். நீங்களும் இன்னும் இரண்டொரு நாளில் கொடுக்க முயற்சி செய்யுங்கள்'' என்று கூறி விடை பெற்றான். ஆசிரியர் முனியாண்டி ஒட்டுத் திண்ணையிலிருந்து எழுந்து வீட்டுக்குள்ளே சென்றார்.

வேதனையோடு வீட்டிற்குள் ஆசிரியர் முனியாண்டி நுழைவதைக் கண்டு, அவரது மனைவி பொன்னம்மாள் திடுக்கிடவில்லை. இருபத்தைந்து வருட காலமாக அவருக்கு மனைவியாக வாழ்க்கைப் பட்ட நாளிலிருந்து இன்றுவரை, அடிக்கடி கண்டு கேட்டுப் பழக்கப் பட்ட நிகழ்ச்சிதான். புதிதாக என்ன இருக்கப்போகிறது, என்ற நினைப்பில் வீட்டு வேலையில் மும்மரமாக ஈடுபட்டிருந்தாள். "பொன்னு!'' ஆசிரியர் முனியாண்டியின் குரல் அவள் வேலையைத் தடைப்படுத்திற்று. நிமிர்ந்துபார்த்தாள்.

"பொன்னு! வேலப்பர் பள்ளியை ஆரம்பித்து இந்த மாதத்தோடு இருபத்தைந்து வருடங்கள் ஆகின்றன. சார்! நீங்கள் இந்த ஊருக்கு வந்து தலைமையாசிரியர் பதவி ஏற்ற பிறகுதான் பள்ளி ஒழுங்காக நடைபெறுகிறது என்று பலர் சொல்ல என் காதால் கேட்டிருக்கிறேன். எனக்கு ஒரே ஒரு ஆசை. நாம் இந்த ஊரைவிட்டு மாறுவதற்குள் வேலப்பர் ஆரம்பப்பள்ளியை வேலப்பர் ஆரம்ப உயர்தரப்பள்ளியாகமாற்றிவிடவேண்டும். அதற்கு முதல் வேலையாக பள்ளியின் இருபத்தைந்தாண்டுவிழாவை வெள்ளி விழாவாகக் கொண்டாடவும், அதிகாரிகளை அழைக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறேன். முதலில் கொஞ்சம் பணம் வேண்டியிருக்கிறது. ஊர் அம்பலம் உத்தமநாதனை நெருங்கினேன். கையை விரித்துவிட்டான். மற்றும் பல பெரியவர்களைக் கண்டு கேட்டேன். பணம் கொடுக்கும் மனம் இல்லை என்று தெரிந்துகொண்டேன். கடைசியாக எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று. உன்னிடம்வந்திருக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்......! என்ற பீடிகையோடு பொன்னம்மாள் முகத்தைப்பார்த்தார் முனியாண்டி.

வேலப்பர் பள்ளி வெள்ளிவிழாவுக்கும் தனக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? பெட்டி நிறையப் பணம் வைத்துக்கொண்டிருக்கிறேனா...? விழாவுக்கு நன்கொடை

வழங்குவதற்கு! ஒரு சல்லிக் காசு கூட என்னிடம் இல்லையே! எதற்காக என் உதவி என்ற ஐயம் எழுந்தது பொன்னம்மாளுக்கு. சுற்றிவளைத்து ஏன் பேசுகிறீர்கள்? சுருங்கச் சொல்லிப் புரியவையுங்களேன் என்றாள்.

"பொன்னு! நீ போட்டிருக்கிற தாலிச்சரடைக் கொடு, இருநூறு ரூபாய்க்கு ஈடுவைத்து, மளிகைக் கடைப் பாக்கியைக் கொடுத்து விட்டு, மீதமுள்ள ரூபாயைக் கொண்டு பள்ளியின் வெள்ளிவிழா வைச்சிறப்பாக நடத்திவிடுகிறேன். இரண்டு மாதம் கழித்துத் திருப்பி உன் கழுத்தில் போட்டுவிடுகிறேன்'' என்றார் முனியாண்டி.

தாலிச்சரடு என்றதும் பொன்னம்மாளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. உடலிலே மின்னிக்கொண்டிருந்த தங்கச் சாமான்கள் ஒவ்வொன்றாக விலையாகிக்-கடைசியில் மிஞ்சினது தாலிச் சரடுதான். சுமார் முன்னூறு ரூபாய் பெறும். அதிலேயும் கைவைக்கிறாரே என்றதும் ஆத்திரம் அணை கடந்து வந்தது. ஊருக்குக் கொட்டி அழுவதற்கு என் தாலிச் சரடைத் தர மாட்டேன். போட்டிருந்த நகையெல்லாம் விற்றுத் தின்னுச்சி. மிச்சமுள்ள இதையும் விற்றுவிட்டால் யார் முகத்திலும் விழிக்க முடியாது; குளம் குட்டையிலே விழுந்து சாகவேண்டியதுதான். என்று அழ ஆரம்பித்துவிட்டாள்.

"பொன்னு! நீ அழுவதைப் பார்க்க எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. சற்றுமுன்பு வந்து மளிகைக் கடைக்காரன் பாக்கிப் பணத்தைக் கேட்டுவைத்தான் என்று நின்றான். இன்னும் இரண்டு நாளில் தருகிறேன் என்று வாக்களித்து விட்டேன். அதோடு இந்த நல்ல காரியத்தையும் நடத்திவிடலாம் என்றால் நீ தடையாக நின்று அழுது தொலைக்கிறாய்''—என்று கோபப்பட்டார் முனியாண்டி. அப்படியானால்தான் பொன்னம்மாள் வழிக்கு வருவாள் என்பது அவர் எண்ணம்.

"ஊர்ப் பெரியவர்கள் இருக்கிறார்கள். அரசாங்கம் இருக்கிறது. உங்களுக்கேன் அக்கரை... ஊருக்கு உழைத்துவிட்டு ஒட்டாண்டியாகப் போகிறீர்களா?'' ஆத்திரத்தோடு கேட்டாள் பொன்னம்மாள்.

"ஊர்ப் பெரியவர்கள் உதவாக்கரைகள். சாதிச் சண்டைபோடுகிறார்கள். குடும்பக் கௌரவத்தைப் பார்க்கிறார்கள். அரசாங்கம் ஆமை. எதைச் செய்யவேண்டும் எதைத் தள்ளவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அடுத்தவர்கள் சொல்வதையும் கவனிப்பதில்லை—தானாகச் செய்யவும் முன்வருவதில்லை. மாலை மரியாதைகள் செய்து புகழ்ந்து பாமாலை சூட்டினால் ஏதோ "பார்க்கலாம்! கவனிக்கிறேன்! ஆகட்டும்!'' என்பார்கள். வெள்ளி விழா நடத்தாவிட்டால் ஆரம்பப்பள்ளி ஆரம்பப் பள்ளிதான்—உயர்தரப்பள்ளி யாகாது. எனக்கு இந்த நேரத்தில் உதவி செய்யாவிட்டால் நான் உன் கணவனாக வாழ்ந்து என்ன பயன்? ஒருமுழக் கயிற்றைத் தேட வேண்டியதுதான்.'' என்று பயமுறுத்தினார். பொன்னம்மாள் பணிந்துவிட்டாள். அழுகையும் கண்ணீருமாகத் தாலிச் சரட்டைக் கழற்றிக் கையிலே கொடுத்தாள். முனியாண்டி அதைப் பெற்றுக் கொண்டு அடகுவைக்க அம்பலம் உத்தமநாதன் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

திரும்பி வரும்போது பொன்னம்மாள் அழுதுகொண்டே ஒரு மூலையில் படுத்திருந்தாள். அடுத்த மாதம்தான் திருப்பித் தந்துவிடுவேனே... ஏன் அழுகிறாய் என்று அவளைச் சமாதானப்படுத்திவிட்டு வெள்ளி விழாவுக்காகக் காலையில் அதிகாரிகளைப் பார்க்கப் போக வேண்டும். சீக்கிரம் எழுப்பிவிடு. என்று படுக்கையில் சாய்ந்தார்.

விடிந்தும் விடியாததுமாகப் பக்கத்து வீட்டுக்காரர் அவசரஅவசரமாக ஆசிரியர் முனியாண்டியை எழுப்பி, வீட்டுக்குப் பின்னால் உள்ள கிணற்றில் பொன்னம்மாள் பிணமாக மிதக்கும் திடுக்கிடும் செய்தியைக் கூறினார். அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிப்போய்க் கிணற்றில் எட்டிப்பார்த்தார். அவர் வாழ்வில் உடன் இருந்து வெள்ளி விழாக் கொண்டாட வேண்டிய பொன்னம்மாள் பிணமாக மிதந்துகொண்டிருந்தாள். இருபத்தைந்து வருட காலமாக ஆசிரியருக்கு வாழ்க்கைப்பட்டு அடைந்த தொல்லைகள் இன்றோடு பொன்னம்மாளுக்கு முடிந்தன. ஆனால் முனியாண்டிக்கு! அவர் போன்ற ஏனைய ஆசிரியர்களுக்கு ......!!!

✻

தலைமைக் கழக அறிக்கை 4/59.

தி. மா. மு. கழகம்.

மாணவர் கழகங்களை அமைப்பதற்கும், மாணவர் கழகங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும், மாவட்ட வாரியாக கீழ்கண்டத்தோழர்கள் அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணியினை அன்போடு மேற்கொண்டு செம்மையாகச் செய்து வருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னை மாவட்டம்.

1. என். வி. என். சோமு, பி. ஏ.
2. ஈ. கிருட்டினன், பி. ஏ.
3. எஸ். ஆர். பாலசுப்ரமணியன், (பி. ஏ. ஆனர்ஸ்)
4. வ. செல்வராசன்.

செங்கற்பட்டு மாவட்டம்.

1. பி. பாலசுப்ரமணியம், பி. ஏ.
2. சி. என். ஏ. பரிமளம்.

தென்னாற்காடு மாவட்டம்.

1. இராசகுமார் பீட்டர், (பி. ஏ. ஆனர்ஸ்.)
2. பூவை. நா. இராமாநுசம், (பி. காம் ஆனர்ஸ்.)
3. வி. வி: அறிவுடைநம்பி.

தஞ்சை மாவட்டம்.

1. சீர்காழி சோமசுந்தரம், பி. ஏ.
2. பி. வி. செழியன், (பி. ஏ. ஆனர்ஸ்.)
3. இரா. இராமசாமி.
4. கரந்தை. கணேசன்.

மதுரை மாவட்டம்.

1. ப. நெடுமாறன், (பி.ஏ.ஆனர்ஸ்)
2. இந்திரசித், பி. ஏ.

கோவை மாவட்டம்.

1. திரு. சு. ஆறுமுகம், பி. ஏ., பி. எல். (துணைத் தலைவர், கோவை நகரசபை)
2. கே. ஏ. கிருட்டினசாமி, (பி. ஏ. ஆனர்ஸ்.)

சேலம் மாவட்டம்.

1. இரா. வெங்கடேசன், (பி. ஏ. ஆனர்ஸ்.)
2. வ. தென்னவன்.

பெங்களூர்.

1. கோ. இராமன்.

மற்ற மாவட்டங்களின் அமைப்பாளர்களை அடுத்த அறிக்கையில் வெளியிடப்படும்.

அன்பன்,
எஸ். டி. சோமசுந்தரம்
"எழிலகம்" சிதம்பரம், 26-10-'59. பொதுச்செயலாளர் தி. மா. மு. கழகம்.

புரட்சி எழுத்தாளர்

"ஐரோப்பிய நாட்டு அரசர்களின் கரங்களில் தவழ்ந்த செங்கோலை விடப் பன்மடங்கு சக்திவாய்ந்த பேனா என்னிடம் இருக்கிறது."

இவ்வாறு பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு பிரசித்திவாய்ந்த எழுத்தாளர் ஐரோப்பாவில் முழங்கினர். நாட்டு மக்களிடை, குரோத உணர்ச்சியை வித்திட்டதன் வாயிலாகப் பொதுவாக ஐரோப்பாவிற்கும், குறிப்பாகப் பிரான்சுக்கும் துரதிர்ஷ்டத்தைத் தேடித்தந்தவர் அவர் என்று ஒருசிலரால் குற்றம் சாட்டப்பட்டார். வேறு சிலரால் அவர் ஐரோப்பியக் குடும்பத்தின் அருமந்த தலைவர் என்று அன்போடு அழைக்கப்பட்டார். 1789-ம் ஆண்டு, உலகத்தையெல்லாம் அதிரச்செய்த பிரெஞ்சுப் புரட்சிக்கு வழி கோலியவர் என்ற வகையில், அவர், புரட்சிக்காரர்களால் சிறந்த தீர்க்கதரிசி—ஈடு இணையற்ற தலைவர் என்று பாராட்டப்பட்டார். 1791-ம் ஆண்டில் புரட்சியில் பூத்த பிரெஞ்சு அரசியலமைப்பு மன்றம் அவரது தேய்ந்துபோன எலும்புகளை ஊர்வலமாக எடுத்துச்சென்றதன் மூலம் அவருக்குத் தன் வணக்கத்தையும் இறுதிக்காணிக்கையையும் தெரிவித்துக்கொண்டது.

அக்காலத்துச் சிறந்த மேதையும், வன்மைமிக்க எழுத்தாளருமான அவரின் சக்திவாய்ந்த பேனா முனையிலிருந்து புறப்பட்ட ஒவ்வொரு எழுத்தும் சொல்லும் உறங்கிக் கிடந்த பிரெஞ்சு மக்களின் விடுதலை ஆர்வத்தைத் தட்டியெழுப்பியது. அவரது எழுத்துச் சித்திரங்கள் ஏழை மக்களின் இதயங்களையெல்லாம் சென்று தடவி, அவர்களின் நரம்புகளை முறுக்கேறச் செய்தன. அவரின் எழுத்தின் விளைவாக முதியவர்கள், பெண்கள், இளைஞர்கள், இவர்களிடமெல்லாம் ஒரு பெருத்த பரபரப்பு ஏற்பட்டது.

அரசாங்கத்தின் ஆணவப்போக்கின் காரணமாக இதுவரை—அல்லலுற்றவர்கள் — அதன் அடக்குமுறைப் பாணத்திற்கு இலக்காகி மிகவும் வேதனையடைந்தவர்கள், இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம் என்ற பாரதியாரின் அடிகளுக்கிணங்க, பாஸ்டிலிச் சிறைக்கூடத்திலே அடைக்கப்பட்டு மிருகங்களினும் கேவலமாக நடத்தப்பட்டவர்கள் — இவர்கள் எல்லோரின் உள்ளத்திலும் ஏன் என்ற வினாக்குறி எழுந்து புரட்சி செய்ய ஆரம்பித்தது. "பாஸ்டிலி" என்ற சொல்லைக் கேட்டதும் இதுவரை பயந்து நடு நடுங்கிக்கொண்டிருந்த பிரெஞ்சு ஏழை மக்கள், அவரின் எழுத்துவன்மை காரணமாக, அந்தச்சொல்லைக் கேட்டதும் ஒரு ஏளனச் சிரிப்பை உதிர்த்து வீறுடன் நிமிர்ந்து பீடுநடை போட்டுச்செல்ல ஆரம்பித்தனர்.

கோ. கோதண்டராமன்

இந்த மகத்தான மாறுதலைப் பிரெஞ்சு நாட்டில் தோற்றிய புரட்சி எழுத்தாளர்தான் பிராங்காய்ஸ் மேரி அரோட் வால்டேர். அவரது எழுத்துச் சித்திரங்களில், மக்களிடத்திலே காணப்படவேண்டிய பரஸ்பர அன்புணர்ச்சி, மனித சுதந்திரம், அரசியல் தெளிவு முன்னேற்றம் இவைகளைப்பற்றிய அறிவுரைகள் ஆங்காங்கே நடம்புரிகின்றன. விரிப்பானேன்? பதினெட்டாம் நூற்றாண்டில்நிலவிய ஐரோப்பாவின் கண்கள் என்று அவர் கருதப்பட்டார்.

பாரிஸ் நகரத்தைச் சேர்ந்த செல்வச் சீமான் குடும்பமொன்றில் கி. பி. 1694-ம் ஆண்டில் "பிராங்காய்ஸ் மேரி அரோட்" தோன்றினர். விளையும் பயிர் முளையிலே தெரியுமென்பார்கள். அதற்கிணங்க, அரோட் தனது இளமைப் பருவத்திலேயே நுண்ணிய அறிவுத்திறனும் கூர்த்த செவிகளும் உடையவராய்த் திகழ்ந்தார். அஞ்சா நெஞ்சமும் அரிய கற்பனைத் திறனும் குன்றாத ஆர்வமும் இளமைப் பருவத்திலேயே அரோட்டிடம் மிகுந்து காணப்பட்டன. இளைய அரோட் தன் ஆதரவாளர் ஒருவரால் பிரபுக்கள், மேதைகள் நிறைந்த ஒரு சங்கத்திற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டார். அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அந்தச் சங்கம், புத்தி கூர்மையும், உணர்ச்சி மிகுந்த அகச் சான்றையும் கொண்ட பலரைக் கொண்டிருந்த போதிலும், அதனைத் தூய்மையற்றதொரு சங்கம் என்றுதான் கூறவேண்டும்.

வால்டேர்

அரோட் அந்தச் சங்கத்தினரால் அன்புடன் வரவேற்கப்பட்டார். அவரது கவிதாசக்தி, அவரின் மதிப்பையும் புகழையும் அச்சங்கத்தில் வெகுவாக உயர்த்தின. இச்சங்கத்தோடு தொடர்பு கொண்ட சின்னாட்களிலேயே அரோட், அரசாங்கத்திற்கு எதிராகச் சில கவிதைகள் புனைந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, பாஸ்டிலி சிறைக்கூடத்திலே தள்ளப்பட்டார். துன்பமும் தனிமையும் கொஞ்சி விளையாடும் அந்தப் பாஸ்டிலி சிறைக்கூடத்தில் அரோட் தனதுபெயரை மாற்றி "வால்டேர்" என்று வைத்துக்கொண்டார். "வால்டேர்" என்ற இந்தப் பெயர், எதிர்கால வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்றதன்றி, ஐரோப்பாவிற்கும் எதிர்காலச் சந்ததிக்கும் நன்கு அறிமுகமாகிவிட்ட பெயராக ஆகிவிட்டது என்றால், அது மிகையன்று.

சிறைக்கூடத்தில் நுழைந்தபோது வால்டேருக்கு இருந்த மதிப்பு, அவர் அதனைவிட்டு நீங்கியபோது முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தது. வால்டேர் ஓர் புரட்சி எழுத்தாளராக மாறுவதற்குக் காரணமாக இருந்தது, ஒரு சிறு பூசல்தான் என்று கூறப்படுகிறது. இப்பூசலின் விளைவாக வால்டேர் மறுமுறையும் பாஸ்டிலி சிறைக்கூண்டிலடைக்கப்பட்ட கிளியானார்.

சிறை வாழ்வை அனுபவிப்பதற்கு முன் வால்டேர், வெறும் கவிஞராக மட்டுமே திகழ்ந்தார்,

அப்போது அவரது நெஞ்சம் வெறுங்கவிதைகளைப் புனைவதிலேயே முழுதும் திளைத்திருந்தது. பாஸ்டிலி சிறைக்கூடத்தில் அவர் இருந்தபோது, உணர்ச்சிமிக்க கவிதைகளையும் காவியங்களையும், பரிதாபகரமான முடிவுகளைக் கொண்ட கவிதை நாடகங்களையும் புனைந்தார். அதன் மூலம் அவரது புகழ் நாடெங்கும் காட்டுத் தீயைப் போல் பரவலாயிற்று. அப்போது அவருக்கு அரசாங்கத்தையோ திருச்சபைகளையோ தாக்கவேண்டுமென்ற எண்ணம் மருந்துக்கும் அரும்பியது கிடையாது.

இம்முறை சிறையிலிருந்து விடுதலையானதும், வால்டேர் பாரிஸ் நகரத்தை விட்டு நீங்கவேண்டுமென அரசாங்கம் ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அதனால் அவர் இங்கிலாந்திற்குச் சென்றார்- அவருக்கு முற்பட்ட பல பிரெஞ்சு மேதைகளைப் போலவே, வால்டேரின் வாழ்விலும் அவரின் இங்கிலாந்துப் பயணம் ஒரு குறிப்பிடத்தக்க திருப்பு முனையாக இருந்தது என்னலாம். இங்கிலாந்துக்கு வால்டேர் சென்றபோது அவர் ஒரு கவிஞர் மட்டுமே. ஆனால் இங்கிலாந்தைவிட்டு அவர் திரும்பியபோது ஒரு சிறந்த அரசியல் ஞானியாகவே வெளிவந்தார். இங்கிலாந்தின் சுதந்திரமான அறிவுத் தென்றலை அவர் வேண்டிய மட்டும் நுகர்ந்தார். அவர் இங்கிலாந்தில் வாழும் மக்கள், அடிமை, அச்சம் இவைகளால் பாதிக்கப்படாமல், சுதந்திரமாகவும், சிறப்பாகவும் வாழ்ந்ததோடன்றி, சிந்திப்பதற்கு அந்நாட்டில் நல்ல வாய்ப்பு அளிக்கப்படுவது கண்டு மகிழ்ந்தார். இங்கிலாந்தில் உண்மையென்பது ஒரு சில தத்துவ ஞானிகளின் பரமஇரகசியமாக இல்லாதிருத்தலைக் கண்டு களிகூர்ந்தார். மனிதனின் அறிவும் ஆற்றலும் இந்நாட்டில் குறிம்பிட்ட ஒருசிலரால் மாய்க்கப்படாமல் சுதந்திரமாக வளர்வது கண்டு மிகவும் பூரித்தார். இந்த அரிய சூழ்நிலையைக் கண்டதன் மூலம், தான் பெற்ற புதிய அனுபவத்தை, வால்டேர், பிரான்சுக்குத் திரும்பி வந்ததும், தனது நாட்டில் அடிமைப்பட்டுக் கிடந்த வேற்றுமை, விரோதம் முதலிய வேண்டாத சக்திகளைக் கல்லியெறிவதிலே தனது நாட்டம் முழுவதையும் செலுத்தினார். இங்கிலாந்தில் அறிஞர்கள் எல்லோரும், நாட்டுப் பொது வாழ்க்கையிலும் சமுக வாழ்க்கையிலும் அமோக பங்குகொள்வது கண்டு அகமகிழ்ந்தார்.

பிரான்சுக்குத் தான் திரும்பியதும் இங்கிலாந்தில் தான் கண்ட சுதந்திரத்தையும், அரசியல் தெளிவையும் தன் நாட்டில் பெருக்குவதற்குப் பெரிதும் பாடுபட்டார். இங்கிலாந்தின் உயர்ந்த அரசியல் நெறியும், அந்நாட்டு மக்களின் சிறந்த வாழ்க்கையும் அவருக்குப் பெருவியப்பூட்டின. அதன் விளைவாக அவர் இங்கிலாந்தில் தான் நேரில் கண்டறிந்த சிறந்த தத்துவங்களையும் நியூடனின் விஞ்ஞானக் கருத்துக்களையும் பிரான்சில் பிரசித்தப்படுத்தினார். அப்பொழுது பிரான்சில் நிலவிய சமுகக் கேடுகளைச் சாடி, 1734-ம் ஆண்டில் "தத்துவக் கடிதங்கள்" என்னும் தலைப்பில் சில அரிய கடிதங்களை வெளியிட்டார்.

பிரான்சிலிருந்து 1734-ம் ஆண்டில் மறுமுறையும் நாடு கடத்தப்பட்ட அவர் அப்பொழுது ஜெர்மனிக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது ஜெர்மன் அரசராக விளங்கிய "மகா பிரடரிக்" மன்னருக்கும் அவருக்கும் விளைந்த சச்சரவின் காரணமாக, வால்டேர் சின்னாட்களில் ஜெர்மனியைவிட்டுச் சுதந்திர சுவிட்சர்லாந்திற்குச் சென்றார். அங்கும் அவர் தேடிச் சென்ற அந்தச் சுதந்திரம் அவருக்குக் கிடைக்கவில்லை. இச் சுற்றுப் பயணத்திற்குப் பின் அயல் நாடுகளில் தான் விரும்பும் அமைதிச் சூழ்நிலை கிட்டாது என்ற முடிவுக்கு வந்த வால்டேர் மீண்டும் "பெரினி" என்றழைக்கப்பட்ட பிரெஞ்சு நாட்டுப் பகுதிக்கே வந்து சேர்ந்தார். "பெரினி" என்ற பிரதேசம் பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து இவைகளின் எல்லைப் புறத்தே அமைந்து, அரசர்களுக்கும் அவர்தம் சேனை வீரர்களுக்கும் அதிதூரத்தில் இருந்த குகை போன்றதொரு பிரதேசம் என்னலாம். (அதாவது தான் இருக்கும் வரை.)

சுமார் இருபதாண்டுகள், வால்டேர் பெரினியையே தனது இருப்பிடமாகக் கொண்டிருந்தார். பெரினியில் சென்று குடியேறுவதற்கு முன் வால்டேர் ஓர் புகழ் வாய்ந்த கவிஞர், நாடகாசிரியர், வரலாற்று மேதை—இவ்வாறுதான் திகழ்ந்தார். பிரான்ஸ் அவரைச் சக்தி வாய்ந்த பேனாவீரர் என்றுமட்டுமே ஞறியும். ஆனால் பெரினி அவரைத் தேர்ந்த தத்துவ ஞானியாகவும், அரசியல் மேதையாகவும் மாற்றியது. இந்த இடத்தில் இருந்துதான் வால்டேர் தனது பிரசித்தி பெற்ற நூல்களையும், விலைமதிக்கவொண்ணாத அறிவுப் பெட்டகங்களையும் உலகுக்கு வழங்கினார். இப்போதுதான் வால்டேர் கலைக் களஞ்சியத்தைத் தொகுத்த அவரின் நண்பர்களில் ஒருசிலர் தொடுத்த சிந்தனை சுதந்திரப் போரில் தானும் இறங்கினார். அந்தப் போரிலே பங்கு கொண்டதன் மூலம் வால்டேர் தனது தெள்ளிய கருத்துக்களை அள்ளி அள்ளி வீசி அந்தப் போராட்டத்திற்கே ஒரு புத்துயிர் அளித்தார். பெரினியில் இருந்துதான் வால்டேர் அக்காலத்துச் சிந்தனைச் சிற்பிகள் அனைவராலும் போற்றிப் புகழப்பட்டதும், ஆர்வத்துடன் விரும்பிக்கற்கப்பட்டதுமான தனது எண்ணற்ற அரிய நூல்களை எழுதினார். ஆனால், பெரினியில் இருந்து வால்டேர் எழுதிய நூல்கள் அனைத்தும் இலக்கியங்கள் என்று கூறிவிட முடியாது.

பெரினி என்ற சிற்றூரை வால்டேர் சுறுசுறுப்பு வாய்ந்ததொரு நகரமாக்கினார். காடு கரம்பாகக் கிடந்த நிலங்களைப் பண்படுத்தி, அந்நிலங்களில் ஏழை மக்களுக்கு இல்லங்கள் அமைத்துத் தந்தார். லேஸ், கடியாரங்கள் இவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றையும் அவர் அங்கு நிறுவினார். கிறித்தவ ஆலயங்கள்மீது வால்டேர் நம்பிக்கையற்றவர் என்றபோதிலும், அவைகளின்மீது ஆழ்ந்த பற்றுக்கொண்டிருந்தவர்களுக்கென ஆலயமொன்றை அமைத்தார். வால்டேரின் வயது முதிர முதிர, அவருக்கு மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற ஆர்வமும் வெகுவாக வளர்ந்துகொண்டிருந்தது. வால்டேர் மக்களுக்குத் தொண்டு செய்வதிலே மட்டற்ற ஆர்வமும், புதிய உற்சாகமும் பெற்றுப் பொலிந்தார்.

1788-ம் ஆண்டில் — அதாவது தனக்கு எண்பத்துமூன்றாண்டுகள் நிரம்பப் பெற்றபோது வால்டேர் பெரினியிலிருந்து பாரிசுக்குச் சென்றார். அவர் பாரிசில் வந்திறங்கியபோது, மக்களின் கோலாகல வரவேற்பு அவருக்காகக் காத்துக் கிடந்தது. அவரைக் காண

வேண்டும் என்ற ஆர்வத்தால் உந்தப்பட்ட மக்கள் திரள் திரளாகப் பாரிஸ் நகரத்தில் வந்து குழுமினார்கள். அவர் பிரெஞ்சு நாட்டு மக்களாலே மகானென்றே கருதப்பட்டார். மக்கள் திரளின் ஒளிபொருந்திய கண்களும், அவர்களது மகிழ்ச்சியும் உற்சாகமும், அவர்கள் தன்பால் காட்டிய அளவு கடந்த மதிப்பும் மரியாதையும், அவர்கள் தனக்குத் தந்த பேராதரவும் வால்டேரை மெய்ம் மறக்கச் செய்தன. அதே ஆண்டிலேயே, சில வாரங்களில், வால்டேர் தனது ஆவியை நீத்தார்.

வால்டேரை அக்காலத்துச் சந்ததியிலே வாழ்ந்த, உயர்ந்த—மேலான—ஒப்பற்ற மனிதர் என்றுதான் கூறல் வேண்டும். அவர் எதைக் கண்டும் அஞ்சாத நெஞ்சுரம் படைத்தவர். அதே சமயத்தில் அவர் அமைதியாக இருந்ததே இல்லை. எப்பொழுது பார்த்தாலும் சுறுசுறுப்புடனும், சோர்வு கொள்ளாமலும், உரையாடல்களில் அமிழ்ந்தும், நாடகங்களில் நல்ல பங்கு கொண்டும், அறிக்கைத் தாள்கள் எழுதி வெளியிட்டும் சிறைக் கைதிகளுக்காகப் போராடியும், பழமைப் பாசி அடர்ந்த நிறுவனங்களைச் சாடியும், வால்டேர் ஓர் புயல் வாழ்க்கையையே நடத்தி வந்தார் என்னலாம். வீண் ஆடம்பரத்தையும், போலிச் செய்கைகளையும் வால்டேர் அம்பலப்படுத்தி அகமகிழ்ந்தார். ஆனால் அதே சமயத்தில் அவர் மக்கள்பால் தனது அன்பையும் ஆதரவையும் பொழியத் தவறியதில்லை. மனித சமுதாயத்தின் எந்தத் துறையும் அவருக்கு விலக்கோ அல்லது அவரது கரங்களுக்கு எட்டாதனவோ அல்ல. திறந்த வெள்ளையுள்ளம் கொண்டிருந்த காரணத்தால் இனம், நாடு மதம் என்பன போன்ற குறுகிய வரம்புகளுக்குக் கட்டுப்படாமல், நிமிர்ந்து நடைபோட்டுச் சென்ற நல்லறிவாளர் அவர்.

ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்த "கொயதே" என்பாரைப்போலவே, — பாசாங்கு, போலிவேடங்கள், சுயநலம், பகைமையுணர்ச்சி — இவைகளை வால்டேர் விரும்பினாரில்லை. மனச் சுதந்திரத்தின் அவசியத்தைப்பற்றி கொயதேவைப் போன்றே வால்டேரும் வற்புறுத்தினார். நியாயத்தின் மீதும் நேர்மையின் மீதும் அவருக்கிருந்த தளராத பற்று, தாழ்த்தப்பட்டோர்களுக்காகவும், ஒடுக்கப்பட்டோர்களுக்காகவும் அவரைப் போராடும்படி தூண்டிற்று.

சமுதாயத்தின் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டிக் கேலி செய்வதில் வால்டேர், பெர்னார்ட்ஷாவைப் போலவே சிறந்த நிபுணர். அவர் தனது நகைச்சுவை மூலம் தன் வாசகர்களைக் களிப்புக் கடலிலே ஆழ்த்துவார். அவர்களது சிந்தனை சக்தியைத் தூண்டுவார். நாட்டின் அன்றாட நிலைமைகளையும், நினைப்புக்களையும், நிகழ்ச்சிகளையும் நன்கு படம் பிடித்துக் காட்டுவார். மாற்றுக் கருத்தினரை — ஏழை மக்களின் இரத்தத்தை உறிஞ்சி மாளிகைகளில் மந்தகாச வாழ்வு நடத்தி வந்தோரை — ஆணவக்காரரை — மக்கள் குரலை மதியாத மன்னரை —அம்மன்னரைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த அரசியல் வல்லூறுகளைப்பணியவைக்க வால்டேர் பயன்படுத்திய கேலிச் சித்திரங்கள் என்ற ஆயுதங்கள், பிற ஆயுதங்களைவிடக் கொடூரம் மிக்கவை என்பது மட்டும் உறுதி. எண்ணிறந்த ஏழை மக்களின் கண்ணீரையும், அவர்கள் சிந்திய புண்ணீரையும் (இரத்தம்) கண்டும் மனம் மாறாத பழமை விரும்பிகள், பிற்போக்குவாதிகள், கொடுங்கோலர்கள்— இவர்களெல்லாம் வால்டேரின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் இடியுண்ட நாகம்போலஞ்சி வெய்துயிர்த்தனர்.

வால்டேரின் அரசியல் இலட்சியம் நன்மை பயக்கும் சர்வாதிகாரமாகும். குடிமக்களின் நலனில் உண்மையான அக்கறையும், பற்றும் கொண்ட வரம்பற்ற அதிகாரங்களைக்கொண்ட ஆட்சியாளரின் தலைமையில் இயங்கும் ஒரு அரசாங்கத்தை நிறுவுவதே அவரின் சீரிய நோக்கம். வால்டேர் மக்கள்பால் கொண்டிருந்த அன்பு, ரூசோவின் ஜனநாயகக் கொள்கையின் அடிப்படையில் தோன்றிய அன்பைப்போன்றதன்று. மாறாக, வால்டேர் மக்களிடை காட்டிய அன்பை கர்வமும் வெறுப்பும் கலந்த செல்வச்சீமான் ஒருவன் ஏழைகளின் மீது காட்டிய பரிவு, பரிதாபம் என்றுதான் கொள்ளல் வேண்டும். செல்வவான்களிற் செல்வனாகிய வால்டேரின் நூல் வெளியீடுகள் அனைத்தும் மேற்கூறிய உண்மைகளுக்கு(அதாவது அவர் கீழ்வகுப்பு மக்களிடம் காட்டிய பரிவுக்கு) சான்று பகர்வனவாய் மிளிர்வது கண்கூடு.

வால்டேர் அக்காலத்துப் பிரெஞ்சு மக்களை நாகரிகமற்றவர்கள், முட்டாள்கள், குறைமதியினர் என்றே கருதினார். வால்டேரின் கருத்துப்படி மக்கள் எருதைப் போன்றவர்கள். அவர்களைச் செவ்வனே நடத்திச் செல்வதற்கு நுகத்தடியும், தாத்துக்கோலும், வைக்கோலும் தேவை என்று அவர் குறிப்பிட்டார்.

பிரெஞ்சுப் புரட்சிக்கு வால்டேர் தந்துதவியவை மிகமிகப் பெரியன. அக்காலத்துப் பூத்த பகுத்தறிவு யுகத்தின் சின்னமாகவும், முன்னோடும் பிள்ளையாகவும் அவர் மிளிர்ந்தார். மக்களின் உள்ளங்களிலே அவர் புரட்சிக்கனலைப் பூத்திடச் செய்தார். அறியாமையும் தவறுகளும் அறிவீனத்தின் விளைவுகள் என்று அவர் சுட்டிக்காட்டினார். சமூகமானது அறிவிற்குப் பொருந்தாத (அதாவது பழமை வெறியும் பொறுமையுணர்ச்சியுமற்ற நிலையினைத் தோற்றுவிக்கக் காரணமாக

பேரிழப்பு

இசையுலகில் ஈடு இணையற்றுத் திகழ்ந்த ஏழிசை மன்னர் **எம். கே. தியாகராச பாகவதர்** அவர்களின் மறைவு கேட்டுத் திடுக்கிட்டோம். இவ்வளவு விரைவில் அவர் நம்மை எல்லாம் விட்டுப் பிரிந்தது, நமக்கு மட்டுமல்ல, இந்நாட்டுக்கு மட்டுமல்ல இசையுலகுக்கே ஒரு பேரிழப்பாகும்.

இசையிலே எளிமையும் இனிமையும், அதே சமயத்தில் இசை நுணுக்கமும் அமையப் பாடக்கூடியவர்களில் நமது பாகவதர் முதலிடம் வகித்து வந்தார் என்று கூறுவது மிகைபடுத்தி எடுத்துரைப்பதாகும் என்று எவரும் சொல்லிவிட முடியாது.

அவருடைய மறைவு பொதுவாகத் தமிழ் நாட்டுக்கும், சிறப்பாக இசை உலகுக்கும் எதிர்பாராத பேரிழப்பாகும்.

அவருடைய மறைவால் வருந்தும் அவரது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம். வாழ்க அவர் பெயர்! வளர்க அவர் புகழ்!

ஆ—ர்.

இருக்கும்) மூடநம்பிக்கைகளை ஒழித்துக்கட்டுமேல், சமுதாயத்தின் கேடுகளும் குறைகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோய்விடும் என்று அவர் கருதினார். மூடநம்பிக்கைகளின் பேரிலும், அற்புதங்கள், ஆச்சரியமான சம்பவங்கள்பேரிலும், கட்டப்பட்டு மனிதனின் பகுத்தறிவின் முன் நிற்காத மதத்தை அவர் கடுமையாகத் தாக்கினார். கடவுள ஒருவர்தான் என்றகொள்கையையே அவர் ஏற்றுக்கொண்டார்.

நாட்டில் அவர் சந்திக்க நேரிட்ட அந்த இழிவைக் கருவிலேயே சிதைக்க வேண்டுமென்று அவர் முழக்கமிட்டார். அவர், மேலே குறிப்பிட்ட இழிவு மதமோ, மதஸ்தாபனமோ அல்ல. சமுகத்தில் புரையோடிப்போய் முடைநாற்றமெடுத்த மூடப் பழக்க வழக்கங்கள் என்ற அந்த இழிவைத்தான் அவர் குறிப்பிட்டார். மூடப்பழக்க வழக்கங்களை அவர் அறவே வெறுத்ததன் காரணம், அவைகளினால் அவர் தனது வாழ்க்கையிலே ஏற்க நேர்ந்த இன்னல்கள் ஏராளம்.

அக்காலத்துப் பிரான்சின் சமுக, அரசியல் முறைகளின் அஸ்திவாரத்தையே அவர் தனது புரட்சி மிக்க பேனா ஓவியங்களைக்கொண்டு ஆட்ட ஆரம்பித்தார். அவருடைய நூல்களெல்லாம் "இழிவை அழித்தொழி" என்ற போர்ப்பரணியையே பாடின. அவருடைய நூல்கள் பற்பல துறைகளையும் கவர்ந்துள்ளன. அவருடைய எழுத்துக் கருவூலங்கள் யாவும் அவருடைய மேலான நீதியையும், அவரின் விரிந்த அறிவின் ஆழத்தையும் மனிதனின் முன்னேற்றத்தின்மீது அவர்கொண்டிருந்த அசையாத நம்பிக்கையையும் தெள்ளிதின் புலப்படுத்தி நிற்கும்.

வால்டேரின் நெஞ்சையள்ளும் அறிவுரைகள், கருத்துக்கள் செறிந்த உரையாடல்கள், சுவைமிக்க நாடகங்கள், பரிதாப முடிவுகளைத் தாங்கிய அவருடைய அருஞ்சொற் சித்திரங்கள், அரிய ஆராய்ச்சி நூல்கள் ஐரோப்பாவையே உலுக்கின என்னலாம். வால்டேரின் முக்கிய நூல்களில், "அறநெறி, ஒழுக்கம் இவைகளைப் பற்றிய கட்டுரைகள்" "மகாபீடர் மன்னன் காலத்திய ருஷிய வரலாறு" "தத்துவ அகராதி" என்பவைகளைச் சிறப்பாக கூறலாம். வால்டேர் எழுதிய நூல்கள் பெரும்பாலும் அறிக்கைத்தாள்கள், சிறு புத்தகங்கள், உரையாடல்கள் இவைகளைச் சார்ந்தவையேயாகும். வால்டேரின் இந்த நூல்கள்தான், அவரை பிரான்ஸ் இதுநாள்வரை கண்டிராத எழுத்தாளராக ஆக்குவதற்கு உறுதுணையாக நின்றவை. "காண்டிடி" "சிறுகதைகள்" "பதினான்காம் லூயியின் நூற்றாண்டு" என்ற இந்நூல்கள் வால்டேரின் மிகச் சிறந்த நூல்கள் என்று அரசியல்—எழுத்தாளர் உலகால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. நுண்ணறிவுமிக்க எழுத்தாளராகத் தொடர்ந்து இருபதாண்டுகள் பணியாற்றி, அவ்வரும்பணியின் மூலம் பிரெஞ்சுநாட்டு மக்களைத் திகைக்கவைத்து, அவர்களிடையே புதிய எண்ணங்களையும் எழுச்சிகளையும் தோன்றச்செய்து, வால்டேர் பிரான்சிலே புரட்சிக் கருத்துக்களைத் தூவினார். அவர் விதைத்த அந்தப் புரட்சிக் கருத்துக்களும் மாறுதலும்தான், பிற்காலத்தில் அரசாங்கத்தின் அடக்குமுறையையும் ஆணவப் போக்கினையும் எதிர்த்து மக்கள் பவனிவருவதற்கு அடிகோலின. வால்டேரின் எழுத்துச்செல்வம், அக்காலத்துப் பிரான்சில் மகத்தான செல்வாக்கைப் பெற்றுத் திகழ்ந்தது.

வால்டேர் தனது அரிய எழுத்துக்களின் மூலம் (அக்காலத்தில் நாடுகளை ஆண்டுகொண்டிருந்த அரசியல் நிபுணர்களைவிட) மிக்க திறமையோடு பல நாடுகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மகத்தான ஆற்றலைப் பெற்றிருந்தார். வால்டேர் விட்டுச் சென்ற எழுத்துக்களும் சொற்களும் பலநாடுகளின் மனப்போக்கின் அடிப்படையையே மாற்றும் சக்தியைப் பெற்றுப் பொலிந்தன என்பது யாவரும் ஒப்பமுடிந்ததோர் உண்மையாகும். வால்டேரின் நூல்களில் இந்தியத் துணைக்கண்டத்தைப் பற்றிய சில குறிப்புக்களும் காணப்படுகின்றன.

ஐரோப்பாவில் வெற்றிகரமான ஒரு மக்கள் இயக்கத்தை நடாத்திச் சென்ற மாபெருந் தலைவர் வால்டேர் என்ற விருதினை வரலாற்று ஏடுகள் எக்காலத்தும் தாங்கி நிற்கும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஆங்காங்கே எண்ணச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் இவைகளுக்காகக் கிளர்ந்தெழுந்த போராட்டங்களை நடத்திச் சென்ற தலைவர்களெல்லாம், வால்டேரின் சீடர்கள் என்றால், அவர் மக்களுக்கு ஆற்றிச் சென்ற மாபெரும் பணியின் மேன்மை நன்கு புலனாகும். ஐரோப்பாவின் எதிர்காலத்தை மறைமுகமாக அறிவித்துச் சென்ற சிறந்த தீர்க்கதரிசி தான் வால்டேர், சுருங்கக்கூறின் வால்டேரைப் புறக்கணிப்பது வரலாற்றைப் புறக்கணிப்பதற்குச் சமமாகும்.

1788-ம் ஆண்டில் வால்டேர் தனது ஆவியை நீத்தபோது அவருடைய பள்ளியறை ஒரு பொருட்காட்சிச்சாலையாக மாற்றப்பட்டது. அவரது இருதயம் ஒரு பாண்டத்துள் வைக்கப்பட்டதைப் போலவும், அதனைச் சுற்றி அவருடைய நண்பர்கள் சூழ்ந்திருப்பதைப் போலவும் அவ்வறையில் சித்தரிக்கப்பட்டிருந்தது. பிரசித்தி பெற்ற எழுத்தாளர்களான டாக்டர் ஜான்சனும், டேவிட் ஹியூமும்கூட தாங்கள் இறக்கும்போது நண்பர்கள் சூழ இறக்கவில்லை. வால்டேர் தன் இதயத்திலே நட்புச்சத்தைக் கொண்டிருந்தார் என்று கொள்வதே மிகப் பொருந்தும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்த புரட்சிக்கு வித்திட்ட மும்மணிகள் வால்டேர், ரூசோ, மாண்டெங்கு என்பர் வரலாற்று வல்லுநர்கள். பிரெஞ்சு நாட்டின் வரலாற்றில், ஏன் உலக வரலாற்றிலேகூட, வால்டேருக்கு என்றும் அழியாத உயர்ந்த உன்னத இடமுண்டு. பகுத்தறிவுவாதிகளுக்கு வால்டேர் என்னும் நாமம் தெவிட்டாத தேன். தித்திக்கும் செங்கரும்பு. விடுதலை விரும்பிகளுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் அவர் வழங்கிச் சென்ற சீரிய கருத்துக் கருவூலங்கள் சிறந்த வழிகாட்டி. வால்டேரின் கருத்துக்களால் பிரான்ஸ் பயனடைந்ததைவிடப் பிற நாடுகள்தான் மிகப் பயனடைந்தது என்று கூறல் வேண்டும். அதிகம் கூறுவானேன்?" வாளினும் வலிது எழுதுகோல்" என்னும் பொன்மொழிக்கு இலக்கியமாய் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சிலே வாழ்ந்து இன்று நம் உள்ளங்களிலெல்லாம் அழியாத இடத்தைப் பிடித்துக்கொண்ட சிறந்த அறிவுக் களஞ்சியம், அரசியல் மேதைதான் வால்டேர்.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவன் என்ற முறையில்!

ஆனால் நான்...கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளரல்லவே! ...என் கருத்து, கட்சியினால்,... கட்சியிலே இன்று ஆதிக்கம் செலுத்திவருகின்றோரால் எந்த அளவு ஏற்றுக் கொள்ளப்படும், என்பதை நானறிவேன்!

நான் கூறிய வாசகங்களைத்தான், நாட்டுப்பற்றுக் கொண்ட எவரும் கூற முடியுமே தவிர, வேறுவிதமான கருத்தினைக் கூறத், துளியும் இடமில்லை என்பதையும் உணருகிறேன்.

கட்சியையும் கொள்கைகளையும் காப்பாற்ற வேண்டும் என்பது என்னவோ உண்மைதான்! ஆனால் கட்சியைவிட, நாடு முக்கியமாயிற்றே! நாட்டுக்காகக் கட்சியே தவிர, கட்சிக்காக நாடு அல்லவே!

அஜாய் கோஷ்

அப்பப்ப! இந்த மூன்றாண்டு காலங்களிலே எவ்வளவு தொல்லைகள்—குழப்பங்கள் — கெடுபிடிகள் —போராட்டங்கள்—பூசல்கள்!

புல்கானின் சோவியத் நாட்டு அரசியல் உலகிலிருந்து விரட்டப்பட்டான்—கேலிபேசியது உலகம், கம்யூனிசத்தைப் பார்த்து! ஹங்கேரியைச்சேர்ந்த நாகி தூக்கிலேற்றப்பட்டான்—கண்டனக்குரல் கிளம்பியது, உலகின் பற்பலமூலைகளிலிருந்தும்! பாஸ்டர் நாக் என்ற பெரிய எழுத்தாளன் நோபெல் பரிசு பெறுவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை!—கூக்குரல் கிளம்பியது ஆங்காங்கே!

இப்படி எத்தனையோ பிரச்சினைகள்—தலைவலிகள் — கம்யூனிஸ்டுகளின்மீது மாற்றார் குற்றம் காண்பதற்கு ஏற்ற வாய்ப்புகள், சூழ்நிலைகள்!

இவற்றையெல்லாம் தாண்டி, கட்சியை வளர்ப்பதென்பது சாதாரணமல்ல — ஆனாலும் செய்துவந்திருக்கிறோம், அயராது உழைத்திருக்கிறோம்!

ஆனால்...? அவற்றையெல்லாம் விடப் பெரியதோர் பிரச்சினை—இந்திய சீன எல்லைப் பிரச்சினை!

"இந்தப் பிரச்சினையில் கம்யூனிஸ்டுகளின் கருத்தென்ன?"—இது நாடு முழுவதிலும் எழுகின்ற—எழுப்பப்படுகின்ற கேள்வி! நியாயமானதுதான்! ஆனால்... எந்தக் கருத்தைச் சொல்ல?

புலியின் வாயில் அகப்படுவது நல்லதா, அல்லது நீரில் குதித்து முதலைக்கு இரையாவது நல்லதா என்று கேட்டால், எதைத் தேர்ந்தெடுக்க முடியும்?

பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்குமிடையே தகராறு, பெருத்த தோர்பகை என்னும்போது, பெண் என்ன செய்யமுடியும், கண்ணீர் வடித்துக் கதறியழுவதைத் தவிர?

இந்தியா பிறந்த நாடு நமக்கு—பெருமளவு கடமைப்பட்டிருக்கிறோம், இந்தத் துணைக்கண்டத்திற்கு!



ஆனால் சீனா, அது கம்யூனிசத்தை ஏற்றுக்கொண்ட நாடு என்ற வகையில், நமக்குப் புக்ககம் —அதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம்!

இரு நாடுகட்கும் பகை, பூசல் என்னும்போது, "சமாதானம், சமாதானம்!" என்று செங்கொடியைக் கொஞ்ச நாட்கள் கீழே போட்டுவிட்டு, வெள்ளைக் கொடியைக் காட்டுவதைத் தவிர, வேறென்ன செய்யமுடியும் நாம்?

இந்தச் சமயத்தில் யார் செய்தது குற்றம் என்று எப்படி விளக்கம் தந்துகொண்டிருக்க முடியும்?

மாக்மோகன் லைன் என்ற எல்லைக்கோட்டை ஆதாரமாகக் காட்டிப் பேசுகிறது இந்த நாட்டு அரசு—அந்த எல்லைக்கோட்டை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது சீனா!

இதில் எந்த நாட்டின் வாதம் சரி, எதன் வாதம் தவறு என்று வெளிப்படையாகக் கூறமுடியாத இக்கட்டான நிலை, இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகட்கு!

அதனால்தான் "**தவறு யாருடையதாக இருந்தாலும், சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளுங்கள்**" என்று போதனை புரிவதிலே இறங்கிவிட்டோம், நானும் என்னுடைய சகாக்கள் சிலரும்!

தவறு யாருடையது, யாருடையது, என்று மாற்றுக்கட்சியினர் மீண்டும் மீண்டும் கேட்க, "யாருடையதாக இருந்தாலும்" என்ற வாசகத்தை நாங்களும் மீண்டும் மீண்டும் தவறாமல் பயன்படுத்தி வருகின்றோம்—இரு நாடுகட்கும் நல்லபிள்ளைகளாக வேண்டும் என்ற எண்ணத்தில்!

இதற்கிடையே, டாங்கே—தனக்கே உரித்தான முறையில், எங்களில் யாரையும் கலந்தாலோசிக்காமல், காரசாரமாகத் தாக்குதல் கணையைத் தொடுத்துவிட்டார், சீனாவின்மீது!

சீனாவை நாம் இன்று கண்டித்துவிடலாம்—கஷ்டமில்லை! மற்றவர்களைவிடக் காரசாரமாகவே வார்த்தைகளைப் பயன்படுத்தலாம் — பயிற்சி பெற்றிருக்கிறோம், அந்தத் துறையில்!

ஆனால், இன்று நமக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சினை பெரிய தொடர்கதை—சீனாவைக் கண்டிப்பதோடு நின்றுவிடப்போவதில்லை!

அதன்பிறகு மற்றொரு பிரச்சினை எழும்! "அது சரி... சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து நாட்டுப்பற்றை நீங்கள் நிலைநாட்டிக் கொண்டவரை நல்லதுதான்!... ஆனால் நீங்கள், 'முதலாளித்துவத்திலேதான் ஏகாதிபத்தியம் முளைக்கிறது, கம்யூனிசத்திலே ஏகாதிபத்தியம் என்ற வார்த்தைக்கே இடமில்லை' என்று வாதாடினீர்களே, அந்த வாதம் தவறென்று இப்போது ஏற்றுக்கொள்கிறீர்களா!" என்றுகேட்பார்கள்! என்ன பதில் சொல்லமுடியும் அப்போது?

அதுமட்டுமா? மார்க்ஸ் சொன்னானே, மற்றொரு தத்துவம்—வர்க்கபேதத்தின் அடிப்படையிலேதான் உலகிலுள்ள போர்களெல்லாம் நிகழ்கின்றன என்று — அந்தத் தத்துவம் இனியும் எப்படிப் பொருந்தும்? சீனாவுக்கும் இந்தியாவிற்குமிடையிலே இருக்கின்ற வர்க்கபேதமென்ன-என்று கேள்வி மேல் கேள்வியாக அடுக்கக்கூடும், வருங்கால உலகம்!

இவற்றிற்கெல்லாம் என்னபதில் சொல்லுவது—இந்த நாட்டு மக்கட்கு கம்யூனிஸ்டுகள் மீது ஏற்பட்டுவிட்ட அவநம்பிக்கையை எங்

னமை போக்குவது—என்று ஏதும் புரியாததாலேதான், காலம் நல் வழி காட்டும் என்ற நம்பிக்கையில், கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தை இன்னும் கூட்டாமல் இருக்கிறேன்—பொதுக்குழு கூடுவதற்குள் பயங்கரமான சூழ்நிலை மாறக்கூடும், சுமுகமான நிலைமை ஏற்படும், காலம் கனிந்திடும், என்று சபலம் எனக்கு!

அந்தச் சபலம்... என் ஆசைக் கனவு... நிறைவேறுமா?

நம்பூதிரிபாத்

கட்சியின் பொதுக்குழுக்கூட்டம்—இன்னமும் நடைபெறவில்லை—எந்த முடிவும் எடுக்கப்படவில்லை!

பிரச்சினை நாளுக்கு நாள் பெரிதாகிக்கொண்டே போகிறது, இந்த நாட்டுப்படைவீரர்கள் சிலர் சுட்டுக் கொல்லப்படும் அளவுக்கு!

நாடு நம்மை எதிர்நோக்குகிறது—நம் கருத்தை ஆவலோடு கேட்ட வண்ணமிருக்கிறது.

அதற்குள்ளே நம்மீது ஏசல் கணை தொடுக்கத் துவங்கிவிட்டவர்கள் ஏராளம்!

அவர்கள் எதை வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போகட்டும்—எனக்குக் கவலையில்லை! ஆனால்... கம்யூனிஸ்டுகளுக்கு நாட்டுப்பற்று இல்லை, இந்த நாட்டின்மீது அக்கறை இல்லை, என்று சொல்லுகிறார்களே, அதைத்தான் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

அதே சமயத்தில் மறுத்துரைக்கவும் வழியில்லாத சூழ்நிலையல்லவா ஏற்பட்டிருக்கிறது!

எந்தப் பிரச்சினையானாலும் உடனுக்குடனே செயற்குழுவைக் கூட்டி முடிவெடுக்கிற நாம், இந்தப் பிரச்சினையில், மிக முக்கியமானதோர் பிரச்சினையில் இன்னும் எந்த முடிவும் எடுக்காமலிருப்பது காணும் என்னை மனச்சான்று உறுத்துகிறது—மாற்றார் தூற்றலுக்கு மனப்பூர்வமாகப் பதில் சொல்ல இயலவில்லை, தவிக்கின்றேன்!

பண்டாரநாயகா கொலை—உடனே வருத்தம் தெரிவித்தோம் கட்சி இதழ்களிலே எழுதினோம்!

ஈராக் பிரதமரைக் கொல்லச் சதி உடனே காரசாரமாகக் கண்டித்தோம் ஏகாதிபத்திய வாதிகளை!

அல்ஜீரியாவில் தகராறு என்றால், நம் எழுதுகோல்கள்கூடச் செந்நீரைச் சிந்தின—அந்த அளவு காரசாரமாக இருந்தன நமது வாசகங்கள்!

ஆனால்... இந்தப் பிரச்சினையில் இந்த நாட்டுப் பிரச்சினையில்... இன்னமும் கட்சி பூர்வமாகக் கருத்துத் தெரிவிக்கப்படாமலிருப்பது கண்டு சந்தேகிக்கிறேன், தலைமைப் பீடத்தை—உண்மையிலேயே கட்சியை நடத்திச் செல்வோருக்கு நாட்டுப் பற்று இல்லையோ என்று எண்ணுகிறேன்!

எவ்வளவெவ்வளவோ பிரச்சினைகளை மிக எளிதில் சமாளித்துவிட்டேன்—சாமர்த்தியமாகவே சமாளித்திருக்கிறேன் என்று பற்பலர் சொல்லுமளவுக்கு!

ஆனால்... இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பதென்பது இன்னமும் புரியவில்லை!

தலைமைப்பீடம், கருத்தறிவிப்பதிலே தாமதம் காட்டக் காட்ட, என் தலைவலி பெருகுகிறது—தொந்தரவுகள் வளருகின்றன!

எருதின் புண், காகத்திற்குத் தெரியாதென்பார்கள் — அதைப் போல எனக்கும், கேரளத்திலே மற்றக் கம்யூனிஸ்டு நண்பர்கட்கும் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகள், அஜாய்கோஷுக்கும், ஜோஷிக்கும் இன்னமும் புரியவில்லை என்பது மட்டுமல்ல—புரிந்திட நியாயமில்லை வழியில்லைஎன்று கருதுகின்றேன்.

அல்லும் பகலும் அயராது உழைத்துப், பற்பல தொல்லைகட்கு ஆளாகிச், சிற்சில உயிர்களைப் பலிபீடம் நோக்கி அனுப்பிவிட்டு, பிறகு கைப்பற்றினோம் கேளரத்து ஆட்சிப்பீடத்தை!

அதற்கும்ஆபத்து!—கவிழ்க்கப் பட்டுவிட்டது!

கவிழ்க்கப்பட்டதற்கான காரணம் எதுவானாலும், மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறப், படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறோம், கேரளத்திலே உள்ள நாங்கள்!

இந்த நிலையில் இந்திய—சீன எல்லைத்தகராறு!

இப்போது நாம் வாய்மூடிக்கிடந்தால், நமது நாட்டுப்பற்றை நிச்சயம் சந்தேகிக்கக்கூடும் இந்தத் துணைக்கண்டத்து மக்கள்!

பின்னர் நாம், என்றென்றைக்கும் ஒதுக்கப்பட்டவர்களாக, வெறுக்கப்பட வேண்டியவர்களாக ஆகிவிடக்கூடும்!

அத்தகைய பயங்கரத்தைப் புரிந்துகொண்டுதான் என்று கருதுகிறேன், டாங்கே கண்டித்தார், செஞ்சீனாவின் ஆக்கிரமிப்பை!

அதை மறுத்து, "இல்லையில்லை, அது எங்கள்கட்சியின் கருத்தல்ல, டாங்கேயின் தனிப்பட்ட கருத்து, அதற்கு நாங்கள் பொறுப்பல்ல" என்று வாதிடுவானேன், கட்சியின் பொதுச்செயலாளர் அஜாய் கோஷ்!

இந்தப் போக்கு எங்கேகொண்டு போய்விடுமோ, நானறியேன்! ஆனால் எதிர்காலம் இருண்டு கிடக்கிறது என்று மட்டும் புரிகிறது, ஐயப்பாட்டுக்கு இடமில்லாமல்!

"இந்திய—சீன எல்லைப் பிரச்சினையில் கம்யூனிஸ்டுகள் தங்கள் கருத்தைத் திட்டவட்டமாக அறிவித்தாகவேண்டும்" என்று, என் மந்திரி சபையிலே மூன்றாண்டு காலம் பணியாற்றியிருக்கிற வி. ஆர். கிருஷ்ணஐயர் சொல்ல ஆரம்பித்துவிட்டார்.

கூட இருந்து பணியாற்றிய அவருக்கே ஓரளவு சந்தேகம் நம் மீது விழுந்திருக்கிறதென்றால், பொதுமக்கட்கு அப்படிப்பட்ட சந்தேகம் ஏற்படுவதிலே ஆச்சரியமென்ன!

அவர்கள் உள்ளத்திலே ஐயப்பாடு தோன்றிவிட்டால், வருகின்ற கேரளத் தேர்தலிலே கம்யூனிஸ்டு கட்சியின் கதி என்ன?

அன்று, ஆட்சிப்பீடத்திலிருந்து விலகும்போது, அலுவலாளர்களிடமெல்லாம் "மீண்டும் இங்கே வருவேன்! என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டுத்தான் வந்தேன்,

அந்த வாசகம்........உண்மையாகுமா...அல்லது.....பொய்த்துவிடுமா! காலமே, நீதான் பதில் சொல்லவேண்டும்!

★

காஞ்சீபுரம், ௬௭, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.